AKA PUBLIC LIBR

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 } செப்டம்பர் 1963 { இதழ் 9

விருதுகள் மட்டும் போதா!
உரிமையும் வேண்டும்!

தொடக்கப் பள்ளிகள், நடுத்தரப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களுக்குப் பூரிப்பையும் பெருமையையும் அளிப்பதற்காகவும், அவர்கள் ஆற்றிவருகிற அருந்தொண்டின் எழிலையும் ஏற்றத்தையும் நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவும் இந்தியப் பேரரசினர் 1958 முதல் சிறந்ததொரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றனர்.

இந்தியா முழுவதிலும் உள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்களில் போற்றத்தக்க பணிபுரிந்துள்ள 45 பேரையும், அதுபோலவே நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களில் தனிசிறந்த தொண்டாற்றியுள்ள 40 பேரையும் தேர்ந்தெடுத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுதி நற்சான்றிதழ் ஒன்றையும், ரூ. 500 மதிப்புள்ள ரொக்கப்

பரிசு ஒன்றையும் அளித்து அவர்களைப் பாராட்டி மகிழ்வதே இந்த இனிய திட்டமாகும்.

ஆசிரியத் தொழிலில் குறைந்த அளவு இருபது ஆண்டு களாவது தொடர்ச்சியாகப் பணியாற்றி அந்தத் துறையில் முதிர்ந்த அனுபவமும், நிறைந்த ஆற்றலும் பெற்று ஒளிவீசித் திகழும் உத்தமர்களுக்கே இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் புது டில்லியில் பெரியதொரு விழா நடத்தப் பட்டு, அந்த விழாவுக்கு விருதுகள் பெறுதற்கு உரிய ஆசிரியர்கள் அனைவரும் வரவழைக்கப்பட்டு, குடியரசுத் தலைவரால் நேரில் விருதுகள் அளிக்கப்படுகின்றன.

1958ல் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1962–63ஆம் ஆண்டுவரையில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களில் 184 பேருக்கும், நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களில் 160 பேருக்கும் இந்தத் தேசிய விருதுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் இந்த ஆண்டில், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மூவருக்கும் நடுத்தரப்பள்ளி ஆசிரியர் ஒருவருக்கும் இந்தப் பரிசுகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

ஏறத்தாழ இதே வகையான ஒரு திட்டத்தைத் தமிழ்நாட்டு ஆட்சியாளர்களும் கையாண்டு வருகிறார்கள்.

ஆசிரியப் பெருமக்களிற் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர் களுக்கு விருதுகள் வழங்கி மகிழும் இந்த ஏற்பாடு, ஏற்றிப் போற்றிப் பாராட்டத்தக்க ஒன்று என்பதில் ஒரு துளியும் ஐயமில்லை.

இந்த ஏற்பாட்டால், ஆசிரியப் பெருமக்களின் அருந்தொண் டிற்கு அரசாங்கம் தலைசாய்த்து வணங்குகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதுமட்டும் அன்று அந்த அருந் தொண்டால் மக்கள் சமுதாயத்திற்கு ஏற்படுகிற மாபெரும் நன்மையை அனைவரும் அறிந்து போற்றவேண்டும் என்பதில் அரசாங்கத்திற்கு இருக்கிற ஆர்வமும் அக்கறையும் வெள்ளிடை மலையென விளக்கமாகின்றன. அதோடு, இந்த ஏற்பாட்டின் விளைவாக ஆசிரியத் தோழர்களுக்குத் தங்கள் பணியில் புதியதோர் ஊக்கமும் உற்சாகமும் ஏற்பட்டு, தங்கள் தொழிலின் எதிர் காலத்தைப்பற்றிச் சிறந்ததொரு நம்பிக்கையும் உறுதியும் உருவா கின்றன என்பதும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

விருதளித்து மகிழும் இந்த ஏற்பாடு சிறந்தது; சீர்மிகுந்தது; செம்மை சான்றது; செழுமை நிறைந்தது. மறுப்பாரில்லை இந்த உண்மையை.

ஆனால், நாடு முழுவதிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களில் விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குமட்டும் ஐந்நூறு வெண்பொற்காசுகளைப் பரிசாக அளிப்பதால், ஆசிரியப் பெருமக்கள் அனைவருடைய நிலைமையும் உயர்ந்துவிடுமா? அவர்களுடைய வாழ்விலே ஒரு புது எழிலும், அவர்களுடைய குடும்பங்களிலே ஒரு புது வலிவும் உருவாகிவிடுமா? நம்மிலே சிலர் பரிசளிக்கப்பட்டுப் பாராட்டப்படுவது, நம் அனைவருக்குமே பெருமையை அளிக்கும் பூரிப்பான நிகழ்ச்சி என்று எண்ணி ஆசிரியர்கள் அனைவருடைய இதயங்களும் இன்பத்தின் நிலையங்களாக மகிழ்ச்சியொளி வீசித் திகழும் என்ற போதிலும், அந்த மகிழ்ச்சியின் விளைவாக அவர்களுடைய குடும்பங்களை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் தீர்ந்துவிடுமா? இந்தியப் பேரரசும் சரி, தமிழ்நாட்டு அரசும் சரி, இந்தக் கேள்விகளையும், இந்தக் கேள்விகளின் பின்னணியில் அமைந்திருக்கின்ற பொருளாதாரத் துயரங்களையும் ஆர அமர இருந்து எண்ணிப் பார்க்கவேண்டியது, இன்றியமையாத செயலாகும்.

ஆண்டுதோறும் கூடுகிறோம் ஆனந்தமாக—அள்ளித் தருகிறோம் சில பரிசுகளை உள்ளக்களிப்போடு—பெற்றுச் செல்கிறார்கள் சில ஆசிரியர்கள் புன்முறுவல் பூத்த முகத்தோடு—தீர்ந்துவிட்டது பிரச்சினை, முடிந்துவிட்டது சிக்கல் என்று எண்ணிவிடக்கூடாது நாடாளும் நல்லறிஞர்கள்.

ஆசிரியர்களுடைய ஊதியநிலைகள் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஓரளவுக்கு உயர்த்தி அமைக்கப்பட்டன என்பது உண்மைதான். அப்படி உயர்த்தி அமைக்கப்பட்டதன் விளைவாக அவர்களுடைய பொருளாதார நெருக்கடிகள் ஓரளவு தணியலாயின என்பதும் மெய்தான். ஆனால் ஊதிய உயர்வால் ஏற்பட்ட நன்மையை இழந்து தீரவேண்டிய அளவுக்குச் சென்ற சில ஆண்டுகளில், ஏற்கெனவே உயர்ந்திருந்த விலைவாசிகள் மேலும் சில மடங்கு உயர்ந்துவிட்டன என்பதை யாரும் மறுத்தல் இயலாது. தற்போது நாடு நடக்கிற நடையைப் பார்த்தால் இந்த விலைவாசிகள் விரைவில் குறையக்கூடும் என்கிற நம்பிக்கை நமக்குத் தோன்றவில்லை. எனவே, ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற ஊதிய நிலைகளை உடனடியாக மேலும் ஓரளவுக்கு உயர்த்தவேண்டியது இன்றியமையாத செயலாகும்.

விருதை அளித்து மகிழ்வதால் சிலருக்கே நன்மை கிடைக்கிறது. ஊதியத்தை உயர்த்தி அமைத்தாலோ எல்லோருக்கும் நன்மை உருவாகும். உருவாக்கவேண்டும் உருவாக்கக்கூடிய நிலையில் உள்ள ஆட்சித் தலைவர்கள்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த அளவில், ஊதியத்தை உயர்த்தி அளிப்பதோடு, மற்றோர் அரிய செயலை உடனடியாக மேற்கொள்வது இந்தியப் பேரரசின் தலையாய கடமையாகும்.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்ற மேல் அவையிலும் சில உறுப்பினர்கள் ஆசிரியர்களின் பிரதிநிதிகளாக அமர்ந்திருக்கிறார்கள்.

இவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிற வாக்குரிமை, தற்போது உள்ள இந்திய அரசியல் திட்டத்தின்படி, கல்லூரி ஆசிரியர்கள்—உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஆகிய இருசாராருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அரிய உரிமை, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படவில்லை.

ஏன் இந்த ஓரவஞ்சனை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆசிரியர் தொகுதி என்று ஒன்றை ஏற்படுத்தி, அந்தத் தொகுதியிலிருந்து இத்தனைப் பேர் மேல் மன்ற உறுப்பினர்களாக அமர்தல்வேண்டும் என்கிற விதியையும் ஏற்படுத்திய இந்திய அரசியல் திட்டம், அந்தத் தொகுதியின் தேர்தலில் வாக்களிக்கிற உரிமையை ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் அளிப்பதுதானே முறை? அதுதானே அறநெறி? மக்களாட்சிக் கோட்பாட்டின் தத்துவமும் அதுதானே?

அரசியல் நெறியும் அறவழியும் அதுவாக இருக்க, இந்திய அரசியல் திட்டத்தை வகுத்தவர்கள், கல்லூரி ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் மட்டும் வாக்குரிமையை அளித்துவிட்டு, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு அந்த உரிமை கிடையாது என்று அறிவித்திருப்பது சிறிதளவும் நியாயமற்ற ஓர் ஏற்பாடாகும்.

ஜனநாயக ஆட்சிமுறையில் வாக்குரிமை என்பது உயிர்நாடி போன்ற ஓர் உரிமையாகும். அந்த உரிமையை ஆசிரியர்களில் ஒரு சாராருக்கு அளித்துவிட்டு, மற்றொரு சாராருக்கு மறுப்பது ஏன்?

ஒரு கண்ணுக்கு வெண்ணெய்—மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பா?

ஒரு பிள்ளைக்குப் பாசமும் நேசமும்—மற்றொரு பிள்ளைக்கு ஏச்சும் பேச்சுமா?

ஒரு சாராருக்கு உரிமை அளிப்பு, வேறொரு சாராருக்கு உரிமை மறுப்பா?

கல்லூரி ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் மட்டும்தான் வாக்குகளைப் பயன்படுத்தத் தெரியும்—தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தெரியாது என்று எண்ணினார்களா அரசியல் திட்டத்தை வகுத்தவர்கள்? அப்படி எண்ணியிருந்தால் இதைவிடத் தவறான கருத்து வேறு இருக்கமுடியாது.

உண்மையை உள்ளபடி உரைப்பதானால், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட மாணவர்கள்தான், அப்படித் தயாரிக்கப்பட்டபின்னர்தான், உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கல்லூரி களுக்கும் செல்கிறார்கள். ஆகவே கல்வி வளர்ச்சி என்னும் கவின்மிகு கட்டிடத்திற்கு அடிப்படை அமைப்பவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்தான். அந்தக் கட்டிடத்தின் சுவர்களை எழுப்பி, கதவுகளை அமைத்து, பலகணிகளை நிறுவி, கூரையை வேய்ந்து, சுண்ணாம்பை அடித்து அதனைப் பொலிவுடையதாக்குகிற பணியிலே பிற ஆசிரியர்கள் ஈடுபடுவது உண்மையென்றாலும், கட்டிடத்தின் வலிவுக்கு நிலைக்களமாக விளங்குகிற அடிப்படை, தொடக்கப் பள்ளிகளிற் பணிபுரியும் ஆசிரியர்களால்தான் அழுத்தமும் திருத்தமுமாக அமைக்கப்படுகிறது என்பது உலகம் அறிந்த உண்மை. "கடைக்கால் முதலில்—கட்டிடம் பிறகு" என்பது தான், கட்டிடக்கலையிலும் சரி, கல்வித்துறையிலும் சரி, அடிப் படைக் கோட்பாடாக விளங்குகிற அரும்பெரும் கருத்து ஆகும்.

உண்மை இத்தன்மையதாக விளங்கும்போது, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமையை வழங்காமல் பிற ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்குவது, கடைக்காலை அமைக்காமல் கட்டிடம் எழுப்ப முயல்கிற கருத்துக் குருடர்களின் செயலாகவே இருக்கமுடியும். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, யாருடைய கவனக் குறைவால் என்பதும் புரியவில்லை, மன்னிக்கமுடியாத இந்த மாபெரும் தவறு எப்படியோ நுழைந்துவிட்டிருக்கிறது இந்திய அரசியல் திட்டத்தில்! நுழைந்துவிட்டதுமட்டும் அன்று, சென்ற பதினறு ஆண்டுகளாக இந்தப் பொல்லாத தவறு, ஆடாமல் அசையாமல் அழுத்தமாக அமர்ந்துகொண்டும் இருக்கிறது.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் உள்ளங்களைப் புண்படுத்தும் இந்தப் பிழைபாடு உடனடியாகத் திருத்தப்படவேண்டியது, அவசரமும் அவசியமும் மிகுந்த செயலாகும்.

இதுவரை இந்தத் தவறு நீக்கப்படாமலிருப்பது, இந்தியத் துணைக்கண்டத்தின் கல்வித்துறைக்கே ஏற்பட்டுள்ள ஒரு பெருங் களங்கமாகும். இதனை இனியும் விட்டுவைப்பது, அரசியல் திட்டத்தின் பெருமையையே குறைக்கவல்ல இழிநிலை ஆகும்.

நல்லவேளையாக இந்த இழிநிலையைப் போக்குவதற்கான ஓர் அருமையான வாய்ப்பு, இந்தியப் பேரரசுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பை அரசுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருப்பவர், இந்தியப் பாராளுமன்றத்தின் மக்கள் அவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக விளங்கும் திருவாளர் இரா செழியன், எம்.ஏ. அவர்கள் ஆவார்கள்.

"மாநில மேலவைகளுக்கு ஆசிரியர் தொகுதித் தேர்தலில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை தரவேண்டும்" என்று கோரும் அதிகாரச் சார்பற்ற அரசியல் சட்டத் திருத்த மசோதாவை இந்த மாதத் தொடக்கத்தில் திரு. செழியன், பாராளுமன்ற மக்கள் அவையில் முன்மொழிந்துள்ளார்.

அரசியல் திட்டத்தின் 171–வது பிரிவை உரியமுறையில் திருத்துவதன் வாயிலாகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையைத் தரவேண்டும் என்பதுதான் இம் மசோதாவின் குறிக்கோள் ஆகும்.

இந்த மசோதாவைச் சிறிதளவும் தயங்காமல் தாமதிக்காமல் மனநிறைவோடு ஏற்று, உடனடியாக நிறைவேற்றிவைக்க வேண்டியது அரசாங்கத்தின் தலைசிறந்த கடமையாகும். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்த மசோதா ஆயிற்றே—இதனை ஏற்றுக்கொள்வதால் நம் கட்சியின் கௌரவம் பாதிக்கப்படுமோ என்று ஆளும் கட்சியினர் ஒரு சிறிதும் எண்ணத்தேவையில்லை. நியாயமான கருத்தை நிலைநாட்டுகிற ஒரு மசோதாவை யார் கொண்டுவந்தால் என்ன—அதனை அன்போடு ஏற்றுக்கொண்டு, ஆர்வத்தோடு நிறைவேற்றி வைப்பதுதான் நல்லதோர் ஆளும் கட்சியின் கடமையாகும். மசோதாவைக் கொண்டு வருபவர் யார்—அது அல்ல முக்கியம். மசோதாவின் கருத்து யாது? அதுதான் முக்கியம். திருவாளர் செழியன் கொண்டுவந்துள்ள அரசியல் சட்டத் திருத்த மசோதா, மிகச் சிறந்த அடிப்படையைக் கொண்டுள்ள மசோதா; நீண்ட நாட்களுக்கு முன்னமேர நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய நல்லதோர் ஏற்பாட்டைத்

தன்னகத்தே கொண்டுள்ள மசோதா; சென்ற பதினறு ஆண்டுகளாக எவ்வாறே பொறுத்துக்கொள்ளப்பட்டிருந்த ஓர் இழிநிலையை உடனடியாக ஒழித்துக்கட்டவல்ல ஆற்றல்மிக்க மசோதா; ஆயிரமாயிரமாக உள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் மிக இன்றியமையாத ஒரு ஜனநாயக உரிமையை உடனடியாக அளிக்கவல்ல உயர்வும் சிறப்பும் மிக்க மசோதா.

இந்த மசோதாவைத் தட்டாமல் தவறாமல் ஏற்றுக்கொண்டு இதனைச் சட்டமாக நிறைவேற்றிவைக்க இந்தியப் பேரரசினர் உடனடியாக முன்வர வேண்டுமென்று தமிழ்நாட்டுத் தொடக்கப் பள்ளி ஆசிரியப் பெருமக்கள் அனைவருடைய சார்பிலும் அன்புடனும் பணிவுடனும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

விருதுகளை அளிப்பது நல்லதுதான். ஆனல் வாக்குரிமையை அளிப்பது அதைவிட நல்லது.

விருதுகளை அளிப்பதால் ஆசிரியர்களுடைய உள்ளங்களில் உவகை பூக்கும் என்பது உண்மைதான். ஆனல் வாக்குரிமையைத் தருவதால் அந்த உவகை பல நூறு மடங்காகப் பல்கிப் பெருகும் என்பது அதைவிடப் பேருண்மையாகும்.

புதிய பகல் உணவு பாரங்கள்

பகல் உணவு மாதாந்திர அறிக்கை

(தமிழில்) 100–க்கு ரூ. 2-50

MIDDAY MEALS RETURN FOR THE QUARTER ENDING (ENGLISH) 100-Rs. 2–50

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

ASSOCIATION PUBLISHING HOUSE

94-95, New Street, Mannady, Madras-1.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

(இரா. க. முருகன்)

தமிழின் திருவுருவாய்—தமிழ்ப் பண்பாட்டின் உறைவிடமாய்—தமிழர்கள் தலைவராய் இந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாண சுந்தரனார். இவர் தம் முன்னோர்கள் சோழநாட்டுத் திருவாரூரைச் சேர்ந்தவர்கள். ஆதலால் 'திரு' என்னும் சொல் அவர் பெயருக்கு முன் இயல்பாகவே அமைந்து விளங்கியது.

திரு. விருத்தாசலமுதலியாருக்கும் திருமதி சிவகாமி அம்மையாருக்கும் ஆறாவது மகனாய் திரு. வி. க. அவர்கள் 26-8-1883ல் இவ்வுலகில் பிறந்தார். செங்கற்பட்டு மாவட்டம் துள்ளம் கிராமத்தில்தான் இவரும் இவர் தமயனார் திரு. வி. உலகநாத முதலியாரும் பிறந்தார்கள். "ஆறாவது பிள்ளை ஆனை கட்டி வாழும்" என்பது பழமொழி. திரு. வி. க. வின் வலக் காலடியில் ஆறாவதாக ஒரு விரல் இருந்தது இங்குக் குறிப்பிடத் தக்கது.

துள்ளம் கிராமத்தில் விருத்தாசல முதலியார் தம் கடையின் தாழ்வாரத்தில் உலகநாதனுக்கும், கலியாண சுந்தரத்துக்கும் ஆரம்பக் கல்வி அளித்தார். மக்களின் கல்வியில் கருத்துக் கொண்ட விருத்தாசல முதலியார் துள்ளம் கிராமத்தைத் துறந்து இராயப்பேட்டை வந்தார். இராயப்பேட்டையில் அரிசி மண்டி வைத்துக்கொண்டு மக்கள் இருவரையும் 'ஆரியன் பிரைமரி' பாடசாலையில் சேர்த்தார்.

இளமைப் பருவத்தில் திரு. வி. க. நல்ல உடற்கட்டோடு திகழ்ந்தார். கவலையில்லாக் காளையாகத் திரிந்தார். குறும்புத்தனங்கள் செய்வதிலும் தம் வயதொத்த இதர பிள்ளைகளுக்கு இவர் சிறிதும் சளைத்தவரல்லர்.

3—ம் வகுப்பு பயிலும்போது வாழை மரத்தைப் பற்றி எழுதிய கட்டுரைக்காகத் திரு வி. க. வுக்குப் பரிசு கிடைத்தது. 4—ம் வகுப்பு பயில இவர் வெஸ்லி கல்லூரியில் சேர்ந்தார். முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்பு வரையில் ஒவ்வொரு பாடத்திலும் வகுப்பில் இவரே முதன்மை பெற்று விளங்கினார். ஆனால் எதிர்பாராத வகையில் திரு. வி. க. வுக்கு முடக்கு வாத நோய் கண்டது. இந்நோயினால் இரண்டாண்டுகள் துன்புற்றார்.

மீண்டும் 1898—ல் வெஸ்லி கலாசாலையில் 4—ம் வகுப்பில் திரும்பவும் சேர்ந்தார். இக்காலத்தில் வெஸ்லி கலாசாலையில் தமிழாசிரியராக இருந்த யாழ்ப்பாணம் திரு. நா. கதிரைவேல் பிள்ளையின் தொடர்பு இவருக்கு

ஏற்பட்டது. இத்தொடர்பால் திரு. வி.க. வுக்குத் தமிழின்மீது பேரார்வம் பிறந்தது. தாமும் அவர்போல் தமிழ்ப் புலமை பெற்றுத் திகழ வேண்டும் எனத் தீர்மானித்தார்.

தமிழின் மீதும் தமிழாசிரியர் மீதும் பொதுநலத் தொண்டின் மீதும் இருந்த பேரவாவினாலும் மற்றும் சில எதிர்பாரா இடையூறுகளினாலும் திரு. வி. க.வின் பள்ளிப் படிப்பு முற்றாக முற்றுப் பெறவில்லை. ஆறும் பாரம்வரையில்தான் ஆங்கிலக் கல்வியை முறையாகக் கற்றார். பின்னர் ''மதராஸ் டைம்ஸ்'' என்னும் ஆங்கில தினசரி ஆசிரியராக இருந்த கிளின்பார்லோ ஏற்படுத்திய ''ஷேக்ஸ்பியர் கிளப்பிற்குச்'' சென்று அங்கே ஆங்கில இலக்கியச் சொற்பொழிவுகளைக் கேட்டார். அன்னிபெசன்ட் அம்மையார் செய்த ஆங்கிலச் சொற்பொழிவிலே திளைத்தார். இவ்வாறாக ஆங்கில அறிவை விருத்தி செய்து கொண்டார்.

குமாஸ்தா வேலை

1906-ல் திரு. வி. க. ஸ்பென்சர் கம்பெனியில் வேலைக்கமர்ந்தார். ஓய்வு நேரங்களில் தாய்மொழியைக் கற்றலிலும் சமய ஆராய்ச்சி செய்வதிலும் நேரத்தைச் செலவிட்டார். இந்நாளில் யாழ்ப்பாணம் நா. கதிரைவேல் பிள்ளையின் வரலாற்றை எழுதி முடித்தார்.

வங்கப் பிரிவினையை எதிர்த்து நாடெங்கும் சுதேசி இயக்கம் வீறு கொண்டெழுந்தது. சென்னைக் கடற்கரையில் விபின் சந்திர பாலரின் வீர முழக்கம் கேட்ட திரு. வி. க. வின் மனம் சுதேசி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டது. ஸ்பென்சர் அலுவலகத்தில் சுதேசி இயக்கத்தை வளர்க்க எண்ணினார். அலுவல் நேரத்துக்கு முக்கால் மணி நேரம் முன்னதாக அலுவலகத்துக்கு வந்து விடுவார். பணியாளர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு சுதேசி இயக்கம் பற்றி எடுத்துரைப்பார். வந்தேமாதரம் படிப்பார்.

''வந்தேமாதரம்'' என்றால் வெள்ளையரைக் கட்டியடித்தல் என்று தவறாக எண்ணிய வெள்ளையர் மருண்டனர். ஸ்பென்சர் கம்பெனி மானேஜிங் டைரக்டர் திரு. வி. க. வை எச்சரித்தார். அது பொறாத திரு. வி. க. தலைமையனாரின் இசைவு பெற்று 1908-ல் ஸ்பென்சர் வேலையை ராஜினாமா செய்தார்.

ஆசிரியர் பணி

ஆயிரம் விளக்கில் வெஸ்லியன் மிஷின்சார்பில் ஆதித்திராவிடர்களுக்கென நடைபெற்ற பள்ளியில் 1910 முதல் 6 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். அக்காலத்தில் மகாவித்துவான் தணிகாசல முதலியார், திரு. சிங்காரவேலு செட்டியார் ஆகியோர் தொடர்பு திரு. வி. க. வுக்கு ஏற்பட்டது. இவர்களுடன் அளவளாவியும் பாடப்

கேட்டும் தமிழறிவை விருத்தி செய்து கொண்டார்.

திருமணம் செய்துகொள்ள வேண்டாமெனத் திரு. வி. க. ஆரம்பத்தில் எண்ணினார். மடத்தில் சேர விழைந்தார். வெஸ்லியன் மிஷன் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு ஜான் ரத்தினம்பிள்ளை இவர் மனதை மாற்றித் திருமணம் செய்ய இசையவைத்தார்.

திரிசிரபுரம் கிருஷ்ணசாமி முதலியார் மகள் கமலாம்பிகையை 13–9–1912–ல் திருமணம் செய்து கொண்டார். 1916–ல் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் தமிழாசிரியராக அலுவல் ஏற்றார்.

அக்காலத்தில் கல்லூரித் தமிழாசிரியர் ஊதியம் மிகக் குறைவு. கல்லூரி முதல்வரிடம் எடுத்துக் கூறி முதன் முதலாகத் தமிழாசிரியர் ஊதியம் உயர வழி செய்தார். ஒரு தமிழாசிரியரே 4-ம் பாரத்திலிருந்து இன்டர்மீடியட் வரை பாடம் சொல்ல வேண்டும். இதனை மாற்றி வேறொரு தமிழாசிரியரையும் அமர்த்த ஏற்பாடு செய்தார்.

அரசியல் தொண்டு

நாடெங்கும் சுய ஆட்சிக் கிளர்ச்சி பரவத் தொடங்கி நாளுக்கு நாள் வலுத்தது. ராயப்பேட்டை சகோதர சங்கத்தின் இருப்பிடம் அரசியல் கழகமாகியது. சுய ஆட்சிக் கிளர்ச்சியை ஒடுக்கும் பணியில் ஜஸ்டிஸ் கட்சியும் ஈடுபட்டது. 16–6–1917–ல் அன்னிபெசன்ட் அம்மையார் சிறை புகுந்தார். கல்லூரி ஆசிரியர் பதவியைத் துறந்து நாட்டுப் பணியில் ஈடுபடத் திரு. வி. க. விழைந்தார். பலர் தடுத்தனர். பொங்கித்ததும்பிக் கரைபுரண்ட அரசியல் உணர்ச்சி தடைபடவில்லை. 5–12–1917–ல் கல்லூரி ஆசிரியர் பணியிலிருந்து விலகினார்.

7–12–1917–ல் "தேச பக்தன்" ஆசிரியரானார். அந்நாளில் அரசியல் தலைவர்கள் தமிழில் பேச வராதென்று கூறுவதைப் பெருமையாகக் கொண்டிருந்தார்கள். தேச பக்தன் அதனைக் கண்டித்து எழுதியதால் அரசியல் தலைவர்கள் மேடைகளில் தமிழில் பேசுவதைக் கைக்கொண்டனர். அந்த நாட்களில் சட்ட சபையில் ஆங்கிலம் மட்டுமே பேசப்படும். தமிழர்களுக்குத் தமிழ்நினைப்பே வருவதில்லை. ஒருமுறை சேலம் திரு. பி. வி. நரசிம்ம அய்யர் சட்டசபையில் தமிழில் பேசினார். திரு. வி. க. வின் தேசபக்தன் இன்பத் தேன்பிலிற்றும் தமிழில் பேசியதாகச் செய்தி வெளியிட்டது.

1918–ல் திரு. வி. க. வின் மனைவியார் கமலாம்பிகை அம்மையார் இறந்தார். இவர்கள் தம் இல்லற வாழ்வில் இரண்டு குழந்தைகள் பிறந்தன. முதலில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஒரு வாரத்தில் மறைந்தது. பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

திலகவதியெனப் பெயரிட்டனர். அதுவும் ஓராண்டு உலக வாழ்வுடன் மறைந்துவிட்டது.

மீண்டும் மணம் செய்து கொள்ள இவர் கண்டிப்பாக மறுத்துவிட்டார். செல்வந்தர் பலர் பெண்தர முன் வந்தனர். ஒரு லட்சாதிபதி தேசபக்தன் வெளியிட ஏராளமாகப் பணம் தருவதாக ஆசை காட்டினார். திரு. வி. க. இசையவில்லை. கணவன் இறந்தால் மனைவி மீண்டும் மணம் செய்யக் கூடாதென்ற விதி முறை கணவனுக்கும் உண்டு என்ற கொள்கையை வற்புறுத்தி திரு. வி. க. மீண்டும் திருமணம் செய்ய மறுத்துவிட்டார்.

தொழிலாளர் இயக்கம்

தமிழ் நாட்டில் காங்கிரஸ் இயக்கத்தைக் கால் கொள்ளச் செய்த தலைவர்களில் திரு. வி. க. முக்கியமானவர். அதே போல் தமிழ் நாட்டில் தொழிலாளர் சங்க அமைப்புக்கு வித்தூன்றிய தலைவர்களில் திரு. வி. க. வுக்கு முதலிடம் உண்டு. தொழிலாளர் நலனுக்காக அரும்பாடு பட்டார்.

திரு. வி. க. வின் பெரும் முயற்சியால் சென்னை தொழிலாளர் சங்கம் 1918-ல் தோன்றியது. திரு. வாடியா தலைவரானார். திரு. வி. க. துணைத் தலைவரானார். 1920-ல் தோன்றிய தொழிலாளர் மத்திய சங்கத்திற்குத் திரு. வி. க தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

21-10-1920 முதல் 6 திங்கள் பக்கிங்ஹாம் மில்லில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. திரு. வி. க. அப்போது ஆற்றிய பணி வியக்கத்தக்கது. அப்போது சென்னை மாநிலக் கவர்னராக இருந்த வெல்லிங்டன் பிரபு திரு வி. க. வின் தீவிரப் போக்கினை அடக்குவதற்கு வேண்டிய வழிகளை நாடினார். திரு. வி. க. வை நாடு கடத்த உத்தேசித்தார். சர். பி தியாகராய செட்டியார் போன்ற ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தலையிட்டால் திரு. வி. க. அத்துன்பத்திற்கு ஆளாகவில்லை.

சர். பி. தியாகராய செட்டியார் முன்னின்று வேலை நிறுத்தத்தை முடித்துவைத்தார். தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர். மத்திய தொழிலாளர் சங்க அத்தியாயமும் இத்துடன் முடிந்தது. வேலை நிறுத்த நேரத்தில் திரு. வி. க. தொழிலாளர்களுடன் நெருங்கி உறவாடி உதவியதால் தொழிலாளர்களுக்குத் திரு. வி. க. விடம் அன்பு மரியாதை மதிப்பு ஏற்பட்டது.

தேசபக்தனில் திரு. வி. க. தீவிரமாக எழுதி வந்ததால் அரசாங்கப் பார்வை அதன் மீது பலமாக விழுந்தது. திரு. வி. க. பூர்ண உரிமையுடன் தேசபக்தன் பத்திரிகையை நடத்தவில்லையாதலால் பத்திரிகை உரிமையாளர்கள் திரு. வி. க. வின் தீவிரப் போக்கைச் சிறிது குறைத்துக்

கொள்ள வேண்டினர். திரு. வி. க. வின் மனம் இதற்கு இசையவில்லை.

இக்காலத்தில் டாக்டர் வரத ராஜுலு நாயுடு, ராஜாஜி, பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகிய தமிழகத் தலைவர்களின் தொடர்பும் நட்பும் திரு. வி. க. வுக்கு ஏற்பட்டது. தேசபக்தன் ஆசிரியர் பதவியைத் துறந்து காரைக்குடி சென்று மீண்டும் ஆசிரியர் பணியேற்க திரு. வி க. எண்ணம் கொண்டார். தொழி லாளர்கள் திரு வி. க. சென்னை யைவிட்டு அகல்வதை விரும்ப வில்லை.

நவசக்தி உதயம்

தொழிலாளர்கள் ஒவ்வொரு வரும் ஒரு ரூபாய் வீதம் ரூ. 5000 திரட்டித் தந்தனர். சில நண்பர்கள் ரூ. 2000 வரை நிதி சேர்த்தளித்தனர். இப்பொருளு தவி கொண்டு சாது அச்சுக் கூடத்தை நிறுவி நவசக்தி என் னும் வார இதழைத் துவங்கினர். நவசக்தியின் துவக்க இதழ் 20-10-1920-ல் வெளி வந்தது. ஏறக்குறைய 20 ஆண்டுகள் நடைபெற்றது.

திரு. வி. க. சுதந்திர வீரர். திலகரிடம் அதிக பற்றுக்கொண் டவர். 1919-ல் திலகர் சென்னை யில் 3 நாள் தங்கினர். திரு. வி. க. இந்த மூன்று நாளும் தில கருடன் உடன் இருந்தார்.

காங்கிரஸ் கட்சியின் சார்பாக வும், காங்கிரஸின் கிளைக் கட்சி யான சுயராஜ்யக் கட்சியின் சார் பாகவும் நடைபெற்ற தாலுகா, மாவட்ட மாநாடுகள் பலவற்றில் திரு: வி. க. சொற்பொழிவாற்றி யிருக்கிறார்.

காஞ்சி மாநாடு

1925-ம் ஆண்டு நவம்பர் 21, 22 தேதிகளில் காஞ்சியில் தமிழ் மாகாண மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு காங்கிரஸ் வர லாற்றிலும் திரு. வி. க. வின் வாழ்நாளிலும் குறிப்பிடத்தக்க ஒரு மாநாடாகும். மாநாடு திரு. வி. க. தலைமையில் நடைபெற் றது.

டாக்டர் வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ. வெ. ராம சாமி, திருவாளர்கள் எஸ். சீனி வாச அய்யங்கார், சத்திய மூர்த்தி, சி. ஆர். செட்டி, ஆர். கே. சண்முகம் செட்டியார், கே. சந்தானம், எஸ். ராமநாதன் முதலான காங்கிரஸ் தலைவர் களும், ஏ. ராமசாமி முதலியார், குருசாமி நாயுடு, கண்ணப்பர் முதலிய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஜனத் தொகை அடிப்படை யில் சமூக பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற தீர்மானத்தை ஈ. வெ. ராமசாமி மாநாட்டில் கொண்டுவந்தார். இத்தீர்மானம் ஏற்கனவே விஷயாலோசனைக் கமிட்டியில் தோற்றுப் போனது. மீண்டும் மாநாட்டில் கிளப்பவே தலைவர் என்ற முறையில் திரு.

வி. க. இத்தீர்மானத்தை ஆதரித்தார். இதனைத் தொடர்ந்து பெரியார் ஈ.வெ. ராமசாமி, திருவாளர்கள் எஸ். ராமநாதன், சுரேந்திரநாத் ஆர்யா, சக்கரைச் செட்டியார் ஆகிய நால்வரும் சபையை விட்டு வெளியேறினர்.

பெரியார் ஈ. வெ. ராவும் தமிழ்ப் பெரியார் திரு வி.க. வும் கருத்தில் மாறுபாடு கொண்டனர். குடியரசில் ஈ. வெ. ராவும் நவ சக்தியில் திரு. வி.க.வும் ஒருவர் கருத்தை ஒருவர் தாக்கி மறுப்புரை எழுதினர்.

அரசியல் ஓய்வு

1925 டிசம்பரில் கான்பூரில் கவியரசி சரோஜினி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சட்டசபைத்தேர்தல்களில் காங்கிரஸ் தலையிட முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் திரு. வி. க. தீவிரமாகத் தேர்தல் பிரசாரம் செய்தார்.

சட்டசபைகளில் இடம்பெற்று முட்டுக்கட்டை போடவே ஆரம்பத்தில் காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் நுழைவதெனத் தீர்மானிக்கப்பட்டது. தேர்தலில் பெரு வெற்றி பெற்ற காங்கிரஸ்மந்திரிசபையைக்கைப்பற்ற எண்ணியது. திரு. வி. க. இப்போக்கை விரும்பவில்லை. இதனைத் தொடர்ந்து திரு. வி க. காங்கிரஸ் செயற்குழுவினின்று விலகினார். பின்னும் சில நாளில் காங்கிரஸ் அங்கத்தினர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

பிற்காலத்தில் திரு. வி. க. அமைதியான வாழ்க்கையே நடத்தினார். தமிழ்மொழி மாநாடுகளிலும் சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். நூல்கள் வெளியிட்டார். 60ம் ஆண்டு மணி விழாவுக்குப் பிறகு திரு.வி.க. அதிகமாக எதிலும் ஈடுபடவில்லை, 1947-ல் திரு. வி. க. மீண்டும் ஒருமுறை போலீசாரால் இல்லத்திலேயே சிறை வைக்கப்பட்டார்.

1950-ல் கண் பார்வை இழந்தார். ஆனால் கணீரென்ற குரல் மட்டும் இறக்கும் தறுவாய்வரை அப்படியே இருந்தது. 17–9–1953–ல் திரு. வி. க. அமரரானார். அன்று மாலை மயிலை மயானத்தில் திரு. வி. க. வின் உடல் எரியூட்டப்பெற்றது.

திரு. வி.க. தமது வாழ்நாளில் ஏறத்தாழ 50 நூல்கள் எழுதியுள்ளார். பெண்ணின் பெருமை, முடியா காதலா சீர்திருத்தமா, திருக்குறள் விரிவுரை, முருகன் அல்லது அழகு, படுக்கையிற் பிதற்றல், கிறிஸ்துவின் அருள் வேட்டல் முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. திரு. வி.க. தனக்கெனத் தனிநடைவகுத்துக் கொண்டவர். எளிய இனிய நடையில் கற்பார் விரும்பிக் கற்கும் திறத்தது அவர் நடை. தமிழ் உரை நடையில் புதுமை கண்டவர். இத்துறையில் உரை நடை எழுத்தாளர்களுக்குத்திரு. வி க.வின் நூல்கள் சிறந்த வழி காட்டி. வாழ்க திரு. வி. க. வின் பெயர். —“**நவ இந்தியா**”

தங்கக் கட்டுப்பாடு, கட்டாயசேமிப்புத் திட்டங்களில் மாறுதல்கள்

பழைய நகைகளை அழித்து வேறு நகைகள் செய்து கொள்ளலாம்

ஏற்கனவே உள்ள தங்க நகைகளை அழித்து 14 காரட்டுக்கு மேற்பட்ட மாற்றுள்ள வேறு புது நகைகளாக மாற்றிக் கொள்ளலாம் என்று நிதி மந்திரி 21–9–63 அன்று லோகசபையில் அறிவித்தார்.

புதிதாக நகைகள் செய்ய விரும்புபவர்கள் 14 காரட்டுக்கு மேற்பட்ட மாற்றுள்ள தங்கத்தை உபயோகிக்கக் கூடாது என்றும் கூறினார்.

தங்கத்தின் உபயோகத்தைப் படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்பதே சர்க்காரின் கொள்கை என்றும், இப்போது அறிவிக்கப்படும் சலுகைகளால் அந்தக் கொள்கை தளர்த்தப் படுவதாக அர்த்தமில்லையென்றும் நிதி மந்திரி சொன்னார்.

இந்தப் புதிய சலுகை பொற்கொல்லர்கள் பிழைப்பு நடத்த உதவி செய்யும்.

தங்கக் கட்டுப்பாடு உத்திரவை அமல் நடத்தும் பொறுப்பை மத்திய சர்க்காரே எடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்காக மத்திய ரெவின்யூ போர்டில் தங்கக் கட்டுப்பாடு நிர்வாகி யொருவர் நியமிக்கப்படுவார்.

தங்கத்தின் உபயோகம் பற்றி சர்க்காரின் உடனடிக் கொள்கை நீண்டகாலக் கொள்கை இரண்டையும் நிர்ணயிக்கும் மசோதா ஒன்று சீக்கிரத்தில் பார்லிமெண்டில் கொண்டுவரப்படும்.

தங்கக் கட்டுப்பாடு உத்திரவுகளுக்குப் பதிலாக இந்தமசோதா அமல் நடத்தப்படும்.

சர்க்காரின் தங்கக் கட்டுப்பாடு கொள்கையைத் தங்கக் கட்டுப்பாடு நிர்வாகி கவனித்துக் கொள்வார். தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்ற அவர் ராஜ்யங்களின் உதவியையும் நாடுவார்.

கெஜட்டில் அறிவிப்பு

கட்டாய டிபாஸிட் (ஊழியர்கள்) திட்டம் செப்டம்பர் 23-ம்

தேதியிலிருந்து ரத்து செய்யப்படுவதாக கெஜட் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

ஆகவே ரூ. 1600—க்கு மேல் வருட சம்பளம் உள்ள வருமான வரி செலுத்தாத ஊழியர்களிடம் கட்டாய டிபாஸிட் இனி பிடிக்கப்படாது.

ஏற்கனவே பிடிக்கப்பட்ட டிபாஸிட்டுகள் வருடம் 4 சதவிகித வட்டியுடன் திருப்பித் தரப்படும். டிபாஸிட் செய்யப்பட்ட மாதத்தின் அடுத்தமாத முதல் தேதியிலிருந்து திருப்பியளிக்கப்படும் மாதத்துக்கு முந்திய மாதத்தின் கடைசிவரை உள்ள காலத்துக்கு வட்டி கட்டப்படும்.

கட்டாய சேமிப்பு மாறுதல் விவரம்

நில வரி செலுத்துபவர்கள், நகரப்புறங்களில் ஸ்தாவர சொத்துள்ளவர்கள், விற்பனை வரி செலுத்துபவர்கள் ஆகியோர் கட்டாய சேமிப்புத் திட்டத்திற்குப்பணம்கட்ட வேண்டியதில்லை என்று, நிதி மந்திரி திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி லோக சபையில் அறிவித்தார்.

பெரும்பாலான ராஜ்யங்கள் இவர்களை இத்திட்டத்தில் சேர்க்க வேண்டாமென்று யோசனை கூறியிருந்தன.

மாதச் சம்பளம் பெறும், ஆனால் வருமான வரி செலுத்தாதவர்களுக்குக் கட்டாய சேமிப்பு கிடையாது. இதுவரையில் அவர்கள் கட்டிய தொகைகள் காலதாமதமின்றித் திருப்பிக் கொடுக்கப்பட்டு விடும்.

வருமான வரி செலுத்துபவர்களுக்குக் கட்டாய சேமிப்பு உண்டு என்று நிதி மந்திரி ஊர்ஜிதம் செய்தார்.

வருமான வரி செலுத்துபவர்கள் விஷயத்தில் கட்டாய சேமிப்பை ரத்து செய்வது அவர்களுக்குப் பெரிய கஷ்டமாயிருக்கும் என்று நிதி மந்திரி சொன்னார். ஏனெனில், ஐந்து வருஷங்களுக்குப் பிறகு கட்டாய சேமிப்பைத் திரும்பப் பெறலாம் என்று இப்போது இருக்கிறது. சேமிப்பை ரத்து செய்து விட்டால், பூரா தொகையையும் அவர்கள் சர்க்கார்ஜாகச் செலுத்த வேண்டியிருக்கும் என்றார்.

சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் அதிக வசூல் செய்வதற்கு சர்க்கார் இன்னும் அதிக முயற்சி செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்த நிதி வருஷத்தின் முதல் ஐந்து மாதங்களில் சிறு சேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 31 கோடி வசூலாகி இருக்கிறது. இது வரையில் இவ்வளவு அதிக தொகை வசூலானதேயில்லை. வசூலில் மூன்றில் இரண்டு பங்கு ராஜ்ய சர்க்கார்களுக்குக் கிடைக்குமாகையால் அவர்களும் அதிக தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிதி மந்திரி விரும்பினார்.

கட்டாய சேமிப்பு பற்றிய மாறுதல்களை நிதி மந்திரி அறி

வித்தபோது, மெம்பர்கள் கரகோஷம் செய்தனர். ஆனால் வருமானவரி செலுத்துபவர்களுக்குச் சலுகை இல்லை என்று மந்திரி கூறியபோது முணுமுணுப்புகள் எழுந்தன. இவர்களுக்கும் இத்திட்டத்தை ரத்து செய்துவிட வேண்டுமென்று பார்லிமெண்டின் அந்த கூட்டத்தில் வற்புறுத்தப்படலாம்.

கட்டாய சேமிப்புத் திட்டத்தில் செய்யப்படும் மாறுதல்களால் மத்திய சர்க்காருக்கு ரூ. 35 கோடியும் ராஜ்ய சர்க்கார்களுக்கு ரூ. 5 கோடியும் வருமான நஷ்டம் ஏற்படும். ஆயினும், சிறு சேமிப்பு வசூல்கள் அதிகரிப்பின் மூலம் இது ஈடாகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனிதன் வயிற்றில் 100 உருக்கு ஸ்பிரிங்குகள் அறுவை சிகிச்சையில் கண்டுபிடிப்பு

லண்டன், செப். 8—

ஒரு மனிதன் வயிற்றுக்குள் இரும்புக் கட்டில் ஸ்பிரிங்குகள் 100 உட்பட 114 பொருள்கள் இருந்ததை அயர்லாந்து டாக்டர்கள் அறுவை சிகிச்சையில் கண்டுபிடித்தனர்.

இந்த விசித்திர செய்கையை இந்த டாக்டர்கள் பிரிட்டிஷ் வைத்திய சஞ்சிகையில் விளக்கியுள்ளனர்.

இந்த நபரின் வயிற்றுக்குள் இருந்த மற்ற சாமான்கள் 4 ஸ்பூன் கைப்பிடிகள், ஜபமாலையின் ஒரு பகுதி, 4 நாணயங்கள், இரும்பு ஆணிகள், சர்ட் பித்தான் ஆகியவை கார்க் நகர ஆஸ்பத்திரியில் இவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு சுகமடைந்துள்ளார்.

“தலைகீழாக”க் கட்டப்பட்ட 17 மாடிக் கட்டிடம்

லண்டன், ஆக. 31—

சாதாரணமாகக் கட்டடங்கள் அஸ்திவாரமிடப்பட்டு அடுக்கடுக்காக அதன் மீது கட்டடம் எழுப்பப்படும். ஆனால் பிரிட்டனில் கவெண்ட்ரி நகரில் மிக உயரமான 17 மாடிக் கட்டிடம் தலைகீழாகக் கட்டப்பட்டது. அதாவது இக்கட்டடத்தின் 17வது மாடி முதலில் கட்டப்பட்டு அதன் பின்னர் படிப்படியாக கீழ்நோக்கி இக்கட்டடம் தரைமட்டம் வரை கட்டப்பட்டது.

‘ஜாக்பிளாக்’ என்ற முறையில் இக்கட்டடம் எழுப்பப்பட்டது. 17-வது மாடிக்கான கட்டுமானம் தரை மட்டத்தில் கட்டப்பட்டு பிறகு 220 டன் பளு தூக்கும் ‘ஜாக்’குகள் மூலம் இது உயரே தூக்கப்பட்டது. பின்னர் இதேபோல 16-வது மாடியின் கட்டுமானம் கட்டப்பட்டு உயரே தூக்கப்பட்டு 17-வது மாடியுடன் இணைக்கப்பட்டது. இவ்வாறாக இக்கட்டடம் பூராவும் கட்டப்பட்டு இப்போது திறப்பு விழா நடைபெற்றுள்ளது.

நேபாவின் 'அபோர்' இன மக்கள்

என். கே. முஸ்தம்ஜி
அஸ்ஸாம் கவர்னரின் ஆலோசகர்

வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்ஸியிலுள்ள ஐந்து டிவிஷன்களில் பிரம்மபுத்திரா நதியின் வடபகுதியில் அமைந்துள்ளதும், சீனாவின் பெருந் தாக்குதல்களுக்குள்ளானதுமான காமெங், சுபான்ஸிரி, சியாங், லோஹித் ஆகிய நான்கு டிவிஷன்கள் பிரதானமானவை. அந்த டிவிஷன்களின் வழியாகப் பாய்ந்து பிரம்மபுத்திரா நதியில் சேருகிற முக்கிய ஆறுகளின் பெயர்கள் அவைகளுக்குச் சூட்டப்பட்டிருக்கின்றன.

நேப்பாவின் தட்பவெப்பநிலை, இடத்துக்கு இடம் பெரும் மாறுதலுக்குட்பட்டது. பிரம்மபுத்திரா நதி யோரமாக மலை அடிவாரங்களில் வெப்பமாகவும், எல்லையோரமாக 20,000 அடிக்கும் அதிகம் உயர்ந்து நிற்கிற மலையுச்சிகளில் பனி மூடிக் குளிர் நிறைந்ததாகவும் இருக்கிறது.

புதிய பாதை

இந்தியா சுதந்திரமடைவதற்கு முன் வரையில், இவ்விடங்கள் வெளித் தொடர்பின்றி வளர்ச்சி குன்றிய பிரதேசமாக வறண்டிருந்தன. மலையுச்சிகளிலிருக்கும் பயங்கரமான கரடு முரடான கால் நடைப் பாதைகளே அவர்களுடைய பிரதான ரஸ்தா. அடர்ந்த புதர்களில் ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் பசியோடு காத்துக்கிடக்கும்.

இங்குள்ள பூர்வகுடி மக்கள் வெளித் தொடர்பு எதுவுமின்றித் தங்கள் கிராமங்களைச் சுற்றிய வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தனர். உப்பு, நூல் கருவிகள் செய்வதற்கான இரும்பு ஆகியவற்றை வாங்குவதற்காக எப்போதோ அஸ்ஸாம் சமவெளிக் கடைவீதிகளுக்கு வருவதுண்டு. சுமார் 15 தினங்களாகக் கால் நடையாக வந்து கடை வீதிகளை அடைந்து அங்கு அவர்களுக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு சில நாட்கள் ஓய்வெடுத்த பிறகு வீடுகளுக்குத் திரும்புவார்கள். சாமான்கள் வாங்குவதற்காகவும் வழிபாட்டுப் பொருள்கள் வாங்குவதற்காகவும் சில சந்தர்ப்பங்களில் வேலை தேடியும் சமவெளிக்கு வருவதோடு அவர்களுடைய வெளியிடத் தொடர்பு முற்றுப் பெற்றது. ஆகவே அங்குள்ள பிரதான இன மக்களும் கிளை இன மக்களும் பிற இனங்களுக்குப் புரியாத, தங்களுக்குச் சொந்த மொழிகளை மட்டுமே பேசிக் கொண்டும், அவர்களுக்குரித்தான ஆடைகளை அணிந்து கொண்டும், பழக்க வழக்கங்களை மேற்கொண்டும் வந்தனர்.

ஆனால் இன்று ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதற்கான வசதிகள் வளர்ந்திருப்பதன் காரணமாக இப்பூர்வகுடி மக்களின் இருட்டறை வாழ்க்கை மறைந்து வருகிறது; பிற இன மக்களுடன் தாராளமாகப் பழகுவதோடு, பெரிய இந்திய நாட்டின் பிரஜை என்பதையும் உணர்ந்து வருகின்றனர்.

இங்குள்ள பூர்வ குடி மக்களில் 'அபோர்' இன மக்கள் பிற இன மக்களை விட முன்னேறி வருகின்றனர். 'அபோர்' என்னும் வார்த்தையே பல கிளை இனங்களைக் கொண்டதாகும்.

சியாங் டிவிஷனின் வட பகுதியில் காணப்படுகிற புத்த மத மொம்பாக்கள் குளிர் பிரதேசங்களில் வாழ்வதால் 'அபோர்' இன மக்களை விடக் கெட்டியான ஆடைகளை அணிகின்றனர். ஆதி மக்களும் 'மொம்பா' மக்களும் மங்கோலிய சாயை உடையவரென்றாலும் அவர்களுடைய பூர்வீக இடங்களைப் பற்றிக்கருத்து வேற்றுமை இருந்து கொண்டு தான் வருகிறது.

இவர்களுடைய ஆதாரத் தொழில் விவசாய மென்றாலும் ஒரே இடத்தில் தங்கிப் பயிர்த்தொழில் நடத்துவதில்லை. இம்மக்களின் தேவைகள் குறைவாகவே இருப்பதால் அவர்களுடைய பொருளாதாரம் சுயத்தேவை பூர்த்தி வாய்ந்ததாக இருக்கிறது. உப்பு, இரும்பு நூல் ஆகியவற்றுக்காக மட்டுமே அவர்கள் வெளியாரை நம்பியிருக்கின்றனர்.

ஆனால், இப்போது புத்தம் புதிய பள்ளிகள் அங்கங்கே தோன்றிவருகின்றன. வெளி உலகத் தொடர்பும் வளர்ந்து வருகிறது. ஆகவே அவர்களுடைய தேவையும் பெருகிவிட்டது. அதனால் அவர்களுடைய இல்லங்களில் இப்போது ரேடியோ, டார்ச் விளக்கு, சைக்கிள் ஆகியவை காணப்பட்டால் அதில் ஆச்சரியமில்லை.

ஜனநாயகப் பண்பாடு

வெளியுலகத் தொடர்பினால் விளைகிற தவிர்க்க முடியாத மாறுதல் உருவாகி வந்துள்ள போதிலும் தங்களுடைய பாரம்பரிய அமைப்பு முறைகளையும் மொழி, பாட்டு, ஆட்டம் போன்ற பழக்க வழக்கங்களையும்மறக்கவும் இல்லை. புறக்கணிக்கவும் இல்லை. அவர்களிடையே தோன்றுகிற தகராறுகளை யெல்லாம் கிராம முதியோர் அடங்கிய 'கெபாங்' என்னும் குழுவின் தீர்ப்புக்கு விட்டு விடுகின்றனர். நம்மைப் போலத் தற்கால நீதி மன்றச் செலவுகளோ வீண் தாமதமோ அவர்களுக்கில்லை. ஆதி இன மக்கள் பலம் வாய்ந்த ஜனநாயக நிர்வாகத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்; சொந்தத் தகராறுகளைத் தனிப்பட்டவரின் தீர்ப்புக்கு விட்டு விடுவதில்லை; முதியோர் சேர்ந்து குழுவாகத் தீர்ப்பு வழங்குகின்றனர். அத்தீர்ப்புக்கு மறுபேச்சு

இல்லை; 'கெபாங்' என்னும் அக் குழு பெரும் அதிகாரம் வாய்ந்த தெனினும் அவற்றின் அதிகாரம் பிற இனங்கள் விஷயத்திலும் விரிவடையும் விதத்தில் 'பாங் கோ' என்னும் பெரிய அமைப் பாக சமீப காலத்தில் மாற்ற மடைந்து வருகிறது. 'கெபாங்' கூட்டத்தில் சொற்போர்கள் நிகழ்வதும் உண்டு. 'ஆதி' இன மக்கள் அபூர்வ நினைவாற்றலும் நாவன்மையும் படைத்தவர்கள். உலகம் தோன்றிய நாளிலிருந்து அவர்களின் இனம் வளர்ந்த வர லாற்றை நினைத்த நிமிடத்தில் விளக்கும் வன்மை படைத்தவர் கள்.

அவர்களிடையே காணப்படு கிற இன்னொரு புராதன ஸ்தாப னம் 'மோஷுப்' என்று அழைக் கப்படுகிற இளைஞர்கள் பயிற்சி நிலையமாகும். அவை நாகர்களின் 'மொருங்'கைப் போன்றவை. அங்கு ஒழுக்கக்கட்டுப்பாடுடன் பயிற்சி போர்த்திறன் ஆகியவை முக்கியமாகச் சொல்லித் தரப்படு கின்றன. இளைஞர்கள் மணமா வது வரையில் அங்குப் பயிற்சி பெறுகின்றனர்.

பேயும் பூதங்களும்

'ஆதி' இன மக்களும், எல்லைப் புறப பூர்வ குடி மக்களைப் போல, பேய் பூதங்களில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றனர். அவைகளைத் திருப்திப் படுத்தா விட்டால் சமுதாயத்துக்குக் கேடு வருமெனப்பயந்து அவைகளுக் குப் பூஜை போடுவதிலும் பிற சட கங்ளை நிறைவேற்றுவதிலும் ஈடு படுகின்றனர். அவைகளை நடத் துபவருக்குப் பெருமளவு அதிகா ரம் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நிலம் ஒதுக்கு வது, விதைப்பதற்கான நாளை நிர் ணயிப்பது போன்ற மதச் சார் பற்ற அதிகாரங்களும் அவர்களுக் குண்டு. இறந்தவர்களுக்காக நட த்தப்படுகிற சடங்கு மிகவும் முக் கியமாகக் கருதப்படுகிறது. ஆனால் இவைகளுக்கெல்லாம் மேலாக இருப்பவன் ஆண்ட வன் ஒருவனே என்று நம்புகின் கின்றனர். இதுவரையில் அவர் களுக்கிடையே ஹிந்து, கிருஸ் துவம், புத்த மதம் ஆகிய மதங் கள் நெருங்கவில்லை. ஆனால் மோப்பா இன மக்கள் மஹாயான புத்த மதத்தைப் பின்பற்றி வரு கின்றனர்.

கலையும் வாழ்வும்

இம்மக்களின் கலை யுணர்ச்சி அவர்களுடைய எளிய ஆடை களில் பின்னப்பட்டிருக்கும் கவர் ச்சிகரமான சித்திரங்களிலும் அவர்களுடைய கோஷ்டி நடனங் களிலும் மிளிருவதைக் காண லாம். நாட்டியத் தலைவரைச் சுற்றி ஆண்களும் பெண்களும் கைகோத்து நடனமாடுகின்ற னர். முக்கியமான விழாக்களின் போது பல இரவுகளாக நடக்கும் நிகழ்ச்சிகளின் போது அவர் களின் தலைவர்கள், அவ்வின மக்களின் வீர வரலாற்றையும் எதிர் கால இலட்சியங்களையும்

விளக்கிப் பாடிக் கொண்டிருப்பர். இரவு முழுதும் ஆடிக் கொண்டிருப்பார்கள். அவை அவர்களுடைய முன்னோர்களின் தலைமுறை வழியாக வந்த அவர்களின் உணர்ச்சி பாவங்களை வெளிப்படுத்தும் அழகான நடனங்களாகும்.

புதிய விழிப்புணர்ச்சி

சீனர்களின் ஆக்கிரமிப்பின் போது இம்மக்கள் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் சுமந்து சென்று போர் முனையில் வெடி குண்டுகளுக்கிடையே வீரப் போர் புரிந்து கொண்டிருந்த நமது வீரர்களுக்குக்கொடுத்துப் பக்கபலமாக இருந்து வந்தனர். நமது வீரர்களுக்கு இல்லங்களில் இடமளித்து உபசரித்தனர். சீன ஆக்ரமிப்பு உச்ச கட்டத்தில் இருந்தபோது இம்மக்கள் தலைவர்கள் நிகழ்த்திய வீர உரை சிறப்பு வாய்ந்தது. சீனர்கள் இனிமேலும் நம்மைத் தாக்கத் துணிந்தால் அவர்களைத் துரத்தியடிக்கக்கூடிய விதத்தில் அவ்விளைஞர்களுக்கும் பயிற்சியளிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இம் மலைவாழ் மக்களின் இன்பமும், துன்பமும் நம்முடைய இன்பமும் துன்பமுமே; அவர்களுடைய அபிலாஷைகளும், வாழ்க்கைப்பிரச்னைகளும் நம்முடைய தென்றே கருத வேண்டும். அவர்களுடைய இனிய நாட்டுப் பாடல்களும் எளிய நடனங்களும் நமது நகரக்கலை நிகழ்ச்சிகளுக்கு எவ்விதத்திலும் குறைந்த தல்ல.

சியாங் மக்கள் கல்வியறிவு பெறுவதில் உற்சாகமாகக் காணப்படுகின்றனர். அவர்களின் பிள்ளைகள் ஷில்லியிலும் கல்லூரிகளிலும் கல்வி கற்று வருகின்றனர். அவர்களிடையே புதுமைகள் புகுந்துள்ள போதிலும் தங்களுடைய பாரம்பரை இசையையும் நடனங்களையும் கலையையும் மொழியையும் பற்றிப் பெருமைக்கொள்ளுவது அவர்களுடைய கலாச்சாரத்தின் அழகையே பிரதிபலிக்கிறது. சியாங் டிவிஷனில் இன்று பழமையும் புதுமையும் இணைந்து வாழ்கின்றன. அவ்விரு அம்சங்களின் சிறப்புகளை எடுத்துக் கொண்டு சிறப்புடன் வாழ்கின்றனர்.

இமயஜோதி சிவானந்தர்

(தி. கி. சுந்தரம்)

எப்பொழுதெல்லாம் தர்மம் நிலைகுலைந்து அதர்மம் தலைதூக்கி நிற்கிறதோ அப்பொழுது எல்லாம் ஆண்டவன் அவதார மெடுத்துப் பூவுலகில் தோன்றி மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய முற்படுகிறான் என்பது கீதாவாக்கியம். நம் புண்ணிய பாரத பூமியில் அவ்வப்பொழுது தோன்றியுள்ள அவதாரங்கள் எண்ணிக் கூற முடியாது.

நம்மிடையே வாழ்ந்துவந்த சுவாமி சிவானந்த சரஸ்வதி நம் தமிழ் நாட்டில் தோன்றி, இமயத்தில் வாழ்ந்து, அவதார புருஷர்களைப் போன்று அகில உலகத்திற்கும் நல் வழிகாட்டியாக விளங்கி வந்தார்கள். அவர்களின் பெருமையை உலகெங்கிலுமுள்ள மக்கள் உணர்ந்து போற்றுகின்றனர்.

இன்றைக்குப் பல ஆண்டுகட்கு முன்பு இந்தியாவின் தென்பகுதியில் அப்பைய தீட்சதர் என்ற பெயருடைய மிகச் சிறந்த மகான் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வேத சாஸ்திர வல்லுநர் மட்டுமல்லர், சிறந்த பக்தராகவும் விளங்கி வந்தார். அவர்களிடம் அதிசயிக்கத்தக்க பல சித்திகள் அமைந்திருந்தன. சம்ஸ்கிருதத்தில் பல நூல்களை ஆக்கிய பெருமை படைத்திருந்தார். அரசர்கள் பலருடைய அவைதனில் அவர் போற்றப் பட்டு வந்தார் எனினும் பணிவுடைமை, பக்தி என்ற இரு அணிகளையும் தாங்கி வந்தார். அவருடைய குடும்பத்தில் துறவிகள் பலர் தோன்றினர்.

சென்ற நூற்றாண்டில் நெல்லையை அடுத்த பத்தமடை என்னும் கிராமத்தில் வெங்கு அய்யர் என்ற சீரிய அந்தணர் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். அப்பைய தீட்சதரின் பரம்பரையில் உதித்த வெங்குவய்யரும் அவரது மனைவி பார்வதி அம்மாளும் இல்லறத்தை முறையே நடத்தி வந்தனர். அன்றாட வழிபாட்டு நேரங்களில் வெங்கு அய்யர் தன்னை மறந்த நிலையில் கண்ணீர் தாரை தாரையாகப் பெருக்கெடுத்து ஓட சிவபெருமானைப் பிரார்த்தித்து நிற்பார்.

நல்லறத்தின் பரிசு

1887 செப்டம்பர் 8-ந் தேதி இவ்விரு பக்தர்கட்கும் ஒரு அதிசயக் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குக் குப்புஸ்வாமி எனப் பெயர் சூட்டினர். தங்களது கடைசி குழந்தையாதலால் அவர்கள் குப்புஸ்வாமியிடம் அதிக

அன்பு செலுத்தி வந்தனர். அக் குழந்தையும் அதிசயிக்கத்தக்க பல அம்சங்களைப் பெற்றிருந் தது. எனவே தாய் தந்தையர் குழந்தையை ஆண்டவனின் வரப்பிரசாதம் என எண்ணினர். விரைவிலேயே குழந்தையும் அவ் வுண்மையை நிரூபித்துவிட்டது. குறும்புக்காரனாக விருப்பினும், ஓர் பேரறிவாளியின் குறிப்பென மிகவும் நல்ல தன்மைகள் பொருந்தப்பெற்று விளங்கிற்று.

பள்ளிக்கூடத்தில் உள்ள சுறு சுறுப்பும் பலமும் வாய்ந்த பையன் களில் குப்புஸ்வாமி ஒருவர். அவரது அறிவிற்காகப் பள்ளித் தோழர்கள் அவரைப் பெரிதும் போற்றினர். பள்ளியில் குப்புஸ் வாமி பங்கு கொள்ளாத சமூக சேவையே இல்லை. அச்சம் என் பதே அவரிடம் கிடையாது.

சேவையே நோக்கு

கல்லூரியில் நுழைந்த பொழுதே தனது பிற்கால வாழ்க்கைத் திட்டத்தை வகுக்க முற்பட்டார்; அன்புடன் சேவை செய்வதையே அவர் பெரிதும் விரும்பினர். ஆதலால் வைத்தி யத் தொழிலைத் தேர்ந்தெடுத்து பாடங்களை வெகுவாக விரும்பிப் படித்து வகுப்பில் முதன்மையாக இருந்தார். குப்புஸ்வாமியின் திறமை ஆசிரியரின் பாராட்டு தலையும் அன்பையும் பெற்றது. அவ்வாசிரியர்களனைவரையும் குப் புஸ்வாமி நன்கு போற்றித் தொண்டு செய்து வந்தார். உயர்ந்த ஜாதிக்காரன் என்ற எண்ணமே அவருக்குக் கிடை யாது. வேலி வேயும் வேலையில் ஈடுபட்ட ஒரு ஹரிஜனத் தொழி லாளியிடமிருந்து அவ்வேலையைக் கற்றுக்கொண்டதற்காக அத் தொழிலாளிக்கு மாலையிட்டு வழி படவும் முற்பட்டார். ஏன்? அத் தொழிலாளியும் ஒரு வகையில் அவரது ஆசிரியர்தானே?

"அமிர்தம்" வழங்கினர்

இளைஞன் என்ற நிலைமையி லும் தனது ஆரோக்கிய சாத்திர அறிவைத் தனக்கு என வைத் துக்கொள்ள அவரால் முடிய வில்லை. அவ்வறிவை அனைவருட னும் பகுத்துண்ண எண்ணினர். இதன் பலனாக இளைஞர் டாக்டர் குப்புஸ்வாமி "அம்புரோஷியா" என்ற வைத்திய சஞ்சிகையைத் தொடங்கினர். அது உண்மை யிலேயே படிப்பவர்கட்கு "அம்பு ரோஷியா" (அமிருதம்) என விளங்கியது. அதன் அட்டையில் ஒரு பயில்வானின் படம். எல் லோரும் பயில்வான்களாக மாற வேண்டும் என்ற அவரது ஆர் வத்தை இவ்வட்டைப் படம் வெளிப்படுத்தியது. தன் வரு மானத்தைப் பற்றி அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. அதே சமயம் எல்லோரும் ஆரோக்கிய மாக வாழ வேண்டும், பிணி வந் துற்றகாலை ஒவ்வொருவரும் தங் களுக்குத் தாங்களே டாக்டராக விளங்க வேண்டும் எனவும் எண்ணினர்.

வேலையினூடே ஆன்மீக சிந்தை!

டாக்டர் குப்புஸ்வாமி சேவையையே எல்லாவற்றிலும் சிறந்ததாகக் கருதினார். சாதாரணபுறச் சமய சடங்குகளில் அவர் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. டாக்டர் குப்புஸ்வாமி மலேயா மக்கட்குச் செய்த சேவையைப் போல் மற்றெந்த டாக்டரும் செய்ததில்லை என்பர். பிணியாளருக்கு சிகிச்சை செய்து இலவசமாக மருந்துகளைக் கொடுத்து, ஏழையென்றால் உணவுக்கான செலவையும் தன் கையிலிருந்தே கொடுத்துத்தொண்டு செய்து வந்தார். டாக்டரின் புகழ் ஓங்கி வளர்ந்தது. வருமானம் பெருகியது. செலவும் வளர்ந்தோங்கியது. இதைவிடப் பன்மடங்கு அவருடைய விவேகமும் வளர்ந்து வந்தது. ஆத்மீக நூல்கள் பலவற்றையும் அவர் படிக்கலானார்.

துறவும் காசி யாத்திரையும்

1923ல் கடவுள், டாக்டர் குப்புஸ்வாமியை உலகத்தைத் துறக்கத் தூண்டினார். டாக்டர் குப்புஸ்வாமி தனது பெரும் செல்வத்தையெல்லாம் மலேயாவில் உள்ள ஏழைகட்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டுத் தாய் நாடு திரும்பினார். தன்னுடன் ஒரு சிறு பையில் ஒரு சட்டையும், வேஷ்டியும் மட்டுமே உடையவராய்க் காசிக்குப் பிரயாணமானார். கையிலிருந்த மீதிப் பணத்தையும் ஏழைகட்குக் கொடுத்துவிட்டார். தெய்வீக அருளையே தனது செல்வமாகக் கொண்டு டாக்டர் குப்புஸ்வாமி காசியை அடைந்தார். மலேயாவில் ஆயிரக்கணக்கானவர்கட்கு உணவு, உடை, உறைவிடம் எல்லாம் அளித்துக் காப்பாற்றிய அந்த டாக்டருக்குக் கிழிந்த உடையுடன் பிச்சை கேட்டு உண்டு ஒரு சத்திரத்தின் திண்ணையில் படுத்துறங்கவும் நேரிட்டது. ஆனால் அவர் அதை சந்தோஷமாகவே அனுபவித்து வந்தார். துறவின்றலன்றோ கடவுளை அடைய முடியும்?

குருதரிசனமும் சீடர் சிறப்பும்

சில காலம் மகாராஷ்டிர நாட்டில் குப்புஸ்வாமி சஞ்சாரம் செய்து கொண்டிருந்தார். ஒரு போஸ்ட்மாஸ்டருக்குச் சேவை செய்யும் திருப்பணியில் ஈடுபட்டார். டாக்டரின் பெருமை தெரிந்த போஸ்ட்மாஸ்டர் ரிஷிகேசத்தின் பெருமையை டாக்டருக்கு உணர்த்தி அவரை அங்கு அனுப்பியும் வைத்தார்.

டாக்டர் குப்புஸ்வாமி 1923ம் வருட முற்பகுதியில் ரிஷிகேசத்தை அடைந்தார். ஒரு ஆத்மீக குருவைத் தேடலானார். ஏகாந்தமான இடத்தில் சாந்தியுடன் கடவுளின் பெயரைப் பாடி அவரையே தியானித்து, தனது வாழ்க்கையைக் கழிக்க எண்ணினார். விரைவிலேயே ஒரு குருவைக் கண்டு கொண்டார். அவர் தான் சுவாமி விசுவானந்தர்.

மாட்சிமை பொருந்திய சீடனைக் கண்ட குருவும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். விசுவானந்தர் டாக்டர் குப்புஸ்வாமியை சன்யாச ஆசிரமத்தில் அனுமதித்து அவருக்கு "சுவாமி சிவானந்தர்" என்ற பெயரையும் சூட்டினார்.

அடுத்த ஏழு வருடங்கள் சுவாமி சிவானந்தர் கடும் தவத்தில் ஈடுபடலானார். அவரது சாதனைகளைக் கேட்டவர்கள் அதிசயித்து நிற்பர் என்பதில் சந்தேகமில்லை. பிச்சையெடுத்து உண்டு வாழ்ந்தார். சில சமயம் அதுவுமின்றி வாழலானார். சிறு உலர்ந்த ரொட்டிகளை ஒரு மூலையில் வைத்து அதை மட்டும் உட்கொண்டு தன் குடிலுக்கு வெளியே வாராமலேயே பல நாட்கள் இருந்து வருவார். உலர்ந்த ரொட்டியைத் தண்ணீரில் ஊற வைத்து உண்ணுவார். பாலை ஒரு படாடோபப் பொருளாகக் கருதினார். இனிப்புப் பண்டங்களையும், சுவைமிகு உணவையும் அறவே விலக்கினார். பாலுக்காகப் பக்தர்கள் கொடுத்த பணத்தைச் சுவாமிகள் துண்டுப் பிரசுரம் வெளியிடுவதில் பயன்படுத்தினார். தனக்குப்பால்வேண்டாது தன் அறிவுப் பாலை ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஊட்டி வந்தார்.

துறவிலும் ஏழை பங்காளன்

இக்காலத்திலும் ஏழை, பிணியாளர் சேவையில் சுவாமிகள் சிறிதும் பின் வாங்கியதில்லை. ஒரு சிறிய ஆஸ்பத்திரி ஏற்படுத்தினார். தனது வட்டாரத்தில் காலரா முதலிய பயங்கர வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களுக்குச் சேவை செய்து சுவாமிகள் மிகவும் பிரபலமடைந்தார். குணப்படுத்தும் கைராசியைக் கொண்ட சுவாமிகளின் திருப்பார்வையே பிணிகளை அகற்றி மக்கட்கு மகிழ்ச்சியை ஊட்டி வந்தது. சில காலத்திற்குப் பின் சுவாமிகள் கேட்காமலேயே அவருக்கு மலேயாவிலிருந்து இன்ஷூரன்ஸ் பணம் சிறிது வந்து சேர்ந்தது. சுவாமிகள் அதை ஒரு வங்கியிற் போட்டு அதிலிருந்து கிடைத்த வட்டியைக் கொண்டு பால், பழங்கள், தயிர் முதலியன வாங்கி (தனக்கல்ல) பிணியால் அவதியுறும் ஏனைய சாது சன்னியாசிகட்காகச் செலவிட்டார். தினமும் தாம் மட்டும் உலர்ந்த ரொட்டியே உண்பார். அதன்பின் பால் பழங்களைக் கொண்டு சென்று, சாதுக்களுக்கு விநியோகித்து வருவார். அத்தகையது சுவாமிகளின் சஹாயானுபூதியும் துறவுணர்ச்சியும்.

தெய்வநெறி இயக்கம்

சுவாமிகளின் கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள், முதலியன மக்களை விழிப்புறச் செய்தன. அவர்கள் சுவாமிகளை ஆத்மானுபூதி பெற்ற முனிவராக— ஏன் கடவுளின் அவதாரமாகவே எண்ணினர். பெருவாரியான மக்கள் சுவாமிகளை அணு

னர். அநேக இளைஞர்கள் உலகைத் துறந்து சுவாமிகளின் சீடராயினர். அவர்களைச் சுற்றி ஓர் அழகிய ஆசிரமம் வளரத் தொடங்கியது. 1936—ல் சுவாமிகள் தெய்வநெறிக் கழகத்தை நிறுவினார்.

"தெய்வநெறி சகாப்தம்" என்ற திவ்விய ஜீவன சகாப்தம் 1936ல் துவங்கி லட்சக்கணக்கான மக்கட்கு அருட்பிரசாதத்தை அள்ளி அள்ளி அளித்து வந்திருக்கிறது. மானிட உள்ளத்தைத் தூய்மையாக்கும் சகாப்தமே அது. ஆயிரக்கணக்கானவர்களின் ஏன் மனித சமுதாயம் முழுவதினுடையவும் வாழ்க்கையில ஒரு மாறுகாலமே அது. சிவானந்த சம்வத்சரத்தின் துவக்கம் உலகெங்கிலும் தர்மத்தின் புனருத்தாரணத்தைக் குறிப்பிடுகிறது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் திவ்ய ஜீவனச் செய்தி ஒலிக்கிறது. சத்தியம், தூய்மை, அன்பு இம் மூன்றும் அதிகமாக மக்கள் உள்ளங்களில் வீற்றிருக்கத் தொடங்கியது. சேவை, அன்பு, தியானம், ஆத்மானுபூதி இவையே தெய்வநெறியின் தத்துவங்கள்.

சுவாமி சிவானந்தரின் செய்திகளைத் தாங்கும் துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் முதலியன உலகிலே பெருக்கெடுத்துப் பாய்கின்றன. இன்று நம் சுவாமிஜி 200க்கும் அதிகமான நூல்களின் ஆசிரியராக விளங்குகிறார். தெய்வநெறிக் கழகத்தின் முன்னூறுக்கும் அதிகமான கிளைகள் தலைமைக் காரியாலயத்தின் மேற் பார்வையில் உலகெங்கிலும் சேவை செய்து வருகின்றன.

பேரவைகள் தோற்றம்

தலைமைப் பீடத்தில் 'சிவானந்தாசிரமம் மாபெரும் ஸ்தாபனமாக ஓங்கி வளர்ந்துள்ளது. சாதகர்களுக்கு நேரிடையாகப் பயிற்சியளிக்க வேண்டி சுவாமிகள் 'யோக வேதானந்த ஆரண்யப் பல்கலைக் கழகத்தை" 1948—ல் ஏற்படுத்தினார். எல்லா மதங்களையும் சார்ந்த மக்களை ஒன்று சேர்க்க சுவாமிகள் 'அகில உலக சமயப் பேரவை' யை நிறுவியுள்ளார். அதேபோல் சாதுக்களை ஒன்று சேர்க்க 'அகில உலக சாதுக்கள் உலகப் பேரவை'யையும் சுவாமிகள் ஏற்படுத்தியுள்ளார். சாதன வாரங்களைச் சுவாமிகள் வருடமிரு முறை நடத்திவந்தார். உலகின் நாலு பகுதிகளிலுமுள்ள மக்கள் யோக வேதாந்தத்தில் பயிற்சி பெறுகின்றனர். பல பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் தங்கள் கோடைக்கால விடுமுறையை ஆசிரமத்தில் நம் மாமுனிவரிடம் யோகத்தைக் கற்றுக்கொள்வதில் பயன்படுத்தி வந்தனர். இந்த ஆசிரம யோகப் பொருட்காட்சி அரங்கைப் போல் உலகில் எங்குமே காணமுடியாது. ஆச்ரம ஸ்டுடியோவில் யோகாசனத்தைப்

பற்றிய பல படங்கள் முதலி யன இருக்கின்றன.

1950—இல் இலங்கை—இந்தியாவிலுள்ள பல இடங்களில் சுவாமிஜி இரண்டு மாத சுற்றுப் பிரயாணம் செய்தார். நூற்றுக் கணக்கான கூட்டங்களில் சுவாமிகள் பேசினார். கடவுள் நாமமும் தெய்வீக வாழ்க்கையின் செய்தியும் நாடு முழுவதும் பரவின. லட்சக்கணக்கானவர்கள் சுவாமிகளை வழிபட்டு அவருடைய உயரிய மொழிகளைக் கேட்டனர். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி அது.

1953-ல் சுவாமிகள் ரிஷிகேசத்தில் சமயப் பேரவையைக் கூட்டினார். அதற்கு உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். பல வேறு மதத் தலைவர்கள் சுவாமிகளின் தலைமையில் சர்வ மத ஒற்றுமையைப் பிரகடனம் செய்தார்கள். இது மற்றொரு சரித்திர நிகழ்ச்சியாகும்.

வெளிநாடுகளில் ஒளி பரவியது

இப்பொழுது ஐரோப்பா, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலெல்லாம் ஆயிரக்கணக்கானவர்கள் சுவாமிகளின் செய்தியை ஆர்வத்துடன் படிக்கின்றனர். எல்லா ஐரோப்பிய இந்திய மொழிகளிலும் சுவாமிகளின் நூல்கள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. அயல்நாட்டிலுள்ள மக்கள் அங்கிருந்து கொண்டே சுவாமிகளைத் தரிசனம் செய்யவும் அவருடைய உயரிய சொற்களை ஆச்சரியப்படுமளவில் கேட்கவும் செய்யுமளவில் அவரிடம் தெய்வீகச் சக்திகள் செறிந்து விளங்குகின்றன. இளமையிலேயே மக்கள் ஆத்மீக விழிப்பைப் பெறவேண்டும் என்பது தான் சுவாமிகளின் அவா.

சுவாமி சிவானந்தரின் தூய தொடர்பில் நிற்கும் பாக்கியம் பெற்றவர்களுடைய அரிய அனுபவங்களே வியக்கத் தகுந்தவையாக இருக்கின்றன. சுவாமிகளின் தொடர்பினால் துன்பம் தீர்ந்து இன்பமடைந்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்களைச் சொல்லிக் கேட்க ஆனந்தமாக இருக்கும்.

சுவாமி சிவானந்தர் 1963 ஜூலை, 14-ந் தேதி இரவு 16-20 மணிக்கு தனது பூத வுடலை நீத்தார். அவரது உடல் மறைந்தாலும் அவரது ஆசியும் அருளும் என்றும் ஒளி வீசி நிலைத்து நிற்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

—(தினமணி)

கல்வியின் தரம் குறைந்து வருகிறதா ?

[பிரேம்கிர்பால்]

செகண்டரி பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்து வருவதாகப் பலர் குறைபட்டுக் கொள்வதைக் காண்கிறோம். மத்திய சர்க்கார் கல்விக் காரியதரிசி திரு பி. என். கிர்பால் இக்கட்டுரையில், அப்பிரச்னைகளை விரிவாகப் பரிசீலிப்பதோடு பல யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்.

செகண்டரி பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்து வருவதாக எழுப்பப்படும் குரல் இப்போது அடிக்கடி கேட்கிறது பள்ளிகளில் நடைபெறுகிற விழாக்களில் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு ஊக்கமளித்து மாணவர்களை மகிழ்விப்பதற்காக அழைக்கபபடுகிற பிரமுகர்களும் அங்கு அவ்வாறு குறைபட்டுக் கொள்வதில் தவறுவதில்லை. கல்வியின் தரம் எப்போதிலிருந்து குறையத் தொடங்கியிருக்கிறது என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அவர்கள் ஒன்றை மட்டும் நிச்சயமாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் படித்த "அந்தக் காலத்துக் கல்வின் தரத்தைவிட இக்காலத்தில் தரம் மோசமாயிருக்கிறது." இவ்விஷயத்தை முறைப்படியாக ஆராய முயற்சி செய்யாததால் குழப்பமேற்பட்டிருக்கிறது.

'கல்வியின் தரம்' என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்வது நல்லது. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற விஷயங்களில் சர்க்கார் பரீட்சைகளின்போது வாங்குகிற மார்க்குகளை வைத்துக் கொண்டு கல்வியின் தரத்தை நிர்ணயிக்கவேண்டுமா? அல்லது அவர்களுடைய உடலுறுதி, ஒழுக்கம் ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயிக்கவேண்டுமா? அல்லது வேலைத் திறமை, நல்ல பிரஜையாக விளங்கும் தன்மை ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றனவா? இதுபற்றி அவர்களிடையே தெளிவான கருத்து இல்லை என்பது சமீபத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியிலிருந்து தெரியவந்துள்ளது. ஆங்கில இலக்கண அறிவு, எழுத்தாற்றல், பேசும் திறமை போதாதென்று சிலர் சொன்னார்கள். மதத்தையும் தர்மத்தையும் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியவில்லை என்று சிலர் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். பலர் பரீட்சை முடிவுகளே முக்கியம் என்று கூறினார்கள்.

பரீட்சை முடிவுகள்

முதலில் பரீட்சை முடிவுகளை எடுத்துக்கொள்வோம். உயர்தரப் பள்ளிகளில் பரீட்சை முடிவுகள் மோசமாக இருப்பது இப்போதைய நிகழ்ச்சியல்ல. பம்பாய் பல்கலைக் கழகத்தில் முதல் முத

லாக நடைபெற்ற மெட்ரிகுலேஷன் பரீட்சையில் யாருமே தேறவில்லை. 1882–1902–ல் 28 சதவிகிதம் முதல் 34 சதவிகிதம் வரையில் வெற்றி பெற்றிருக்கின்றனர். அது சில ஆண்டுகளில் 26 ஆக வீழ்ந்ததுண்டு சில ஆண்டுகளில் 54–க்கு வளர்ந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் இப்போதைய பஞ்சாப் கவர்னர் திரு பட்டம் தாணுப்பிள்ளை மெட்ரிகுலேஷன் படித்த காலத்தில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் மெட்ரிகுலேஷன் வகுப்பில் சுமார் 21 சதவிகித மாணவர்களே தேறியிருந்தனர். ஆகவே பரீட்சை முடிவுகளை வைத்துக் கொண்டு கல்வியின் தரத்தை நிர்ணயிப்பது உசிதமாகாது.

ஆங்கிலத்தின் தரம் குறைந்து வருகிறது என்று பெரும்பாலோர் கவலைப்படுவதாக டில்லி ஆராய்ச்சியின் மூலமாகத் தெரிய வந்துள்ளது. செகண்டரி பள்ளிகளிலுள்ள சராசரி மாணவர்களின் ஆங்கிலத்தின் தரம் ஒரு போதும் உயர்ந்ததாக இருந்ததில்லை. ஆங்கிலத்தில் தோல்வியுறுவதால்தான் மெட்ரிக்குலேஷன் பரீட்சைகளில் தேறுபவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்து வந்தது. இது நெடுநாளைய அனுபவம். பாடநேரத்தில் மூன்றிலொரு பங்கு ஆங்கிலத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்தும், பள்ளியில் ஆங்கிலத்தின் தரம் போதுமானதாக இல்லை யென்று கல்லூரி ஆசிரியர்கள் கூறி வருகின்றனர்.

நல்ல பள்ளிக்கூடங்கள்

இன்னொரு விஷயமும் கவனத்துக்குரியது. மிக நல்ல பள்ளிகளும் அவ்வளவாக நல்லவையல்லாத பள்ளிகளும் இருக்கின்றன. மேலும் அதே பள்ளியில் மிகவும் கெட்டிக்காரர்களாக விளங்கும் மாணவ மாணவிகள் படிக்கின்றனர். நல்ல பள்ளிகளின் தரம் குறைந்திருந்தால் அல்லது முதல் வரிசை மாணவர்களின் தரம் குறைந்திருந்தால் கல்வியின் தரம் குறைந்துவிட்டதாகக் கூறலாம். அதுபற்றி திட்டவட்டமான ஆராய்ச்சி நடைபெறவில்லையாயினும், அப்படிப் பார்த்தபோது கல்வியின் தரம் குறையவில்லையென்றே நிபுணர்கள் கருதுகின்றனர். ஏனெனில் பாதுகாப்பு சர்வீஸ் என்ஜினியரிங் கல்லூரிகளில் சேருகிற மாணவர்களின் தரம் இதற்கு ஆதாரமாக இருக்கிறது.

உண்மையென்ன ?

கல்வியின் தரம் குறைந்துவிட்டதென்பது ஒரு விஷயத்தில் உண்மையாக இருக்கவேண்டும். பொருளாதார ரீதியிலும் சமூக நிலையிலும் கலாசார வாரியாகவும் பின்னடைந்துள்ள மக்கள் பிரிவினரின் குழந்தைகள் இப்போது ஏராளமாகப் பள்ளிகளில் சேருகின்றனர். அவர்களின் பெற்றோர்கள் இதற்கு முன் பள்ளிகளைப் பார்த்திருக்கக்கூட

மாட்டார்கள். இந்த நெருக்கலைச் சமாளிப்பதற்காக நாட்டின் சந்துபொந்துகளிலுள்ள பள்ளிகளிலெல்லாம் அவசர அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. செகண்டரி பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் பள்ளிகளின் எண்ணிக்கையும் இப்போது 1950–51–ல் இருந்ததைவிட மும்மடங்காகி யிருக்கின்றன வென்றால், எவ்வளவு அவசரக் கோலமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இருக்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

துரதிருஷ்டவசமாக நிதிப் பற்றாக்குறையின் காரணமாகப் பள்ளிகளில் இடவசதிக்கும், நூல் நிலையங்களுக்கும் போதுமான ஏற்பாடு செய்யமுடியவில்லை என்பது உண்மைதான். விலைவாசி உயர்வுக்கேற்ப ஆசிரியர்களின் சம்பளத்தையும் உயர்த்த முடியவில்லை. 1960–ல் செகண்டரி பள்ளி ஆசிரியர்கள் சராசரி சம்பளம் ரூபாய் 140 தான். குறைந்த சம்பளத்தைக் கொண்டு திறமையான ஆசிரியர்களைப் பெறமுடியவில்லை. செகண்டரி படிப்பையும் இண்டர் படிப்பையும் முடித்துக்கொண்டு ஆசிரியர் வேலைக்கு வந்து கொண்டிருந்த மாணவர்கள் நல்ல சம்பளத்தை நாடி தொழில் நுட்பப் பயிற்சியில் சேர்ந்துக் கொள்கின்றனர். தொழில் நுட்பப் பள்ளிகள் அவ்வளவாக இல்லாத நாட்களில் பி. எஸ். ஸி. போன்ற வகுப்புகளில் சேர்ந்தவர்களின் தரத்தைவிட இன்று அந்த வகுப்பில் சேரும் மாணவர்களின் தரம் மிகவும் குறைவாகத்தான் இருக்கின்றது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப்பாடத்திட்டங்களும், ஆசிரியர் நியமன முறைகளும் மேம்பட வேண்டி இருக்கின்றது. பெரும்பாலான உயர்தரப் பள்ளிகளை நடத்தி வருகிற தனியார் ஸ்தாபனங்கள் ஆசிரியர்களுக்கேற்ற ஊதியம் தருவதில்லை போதுமான தரப் பயிற்சி பெறாதவர்களும் குறைந்த சம்பளத்தில் இருப்பவர்களுமான நமது செகண்டரி பள்ளி ஆசிரியர்கள் ஏமாற்றமடைந்திருக்கின்றனர். வகுப்புகளில் நெருக்கடி மிகுந்திருப்பதால் ஒவ்வொரு மாணவருடனும் நேரிடையாகத் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை.

செகண்டரி படிப்பின் தரம் வீழ்ந்து விடவில்லை என்றாலும் மாணவர்கள் நெருக்கம், நிதிப் பற்றாக்குறை காரணமாகப் பல புதிய பிரச்னைகள் தோன்றியிருக்கின்றன என்பது உண்மைதான். இவை விரைவாகத் திருப்திகரமான முறையில் தீர்க்கப்படவில்லை என்றால் நிலைமை இன்னும் மோசமடைந்துவிடக்கூடும். நமது கல்வியின் தரம் குறைந்துவிட்டதாகக் கூறும் அறிஞர்கள் வெளிநாடுகளிலுள்ள உயர் சாதனைகளையும் தற்கால சமூகத்

துக்கு ஏற்ற புதியமுறை கல்வி வேண்டும் என்ற அவசியத்தை யும் கருதி அவ்வாறு கூறுகின்ற னர்.

வயது வந்தோருக்கெல்லாம் செகண்டரிக் கல்வி வசதி செய்து தர வேண்டுமென்ற நிச்சயத்தை—இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் பெருமளவு நிதியை இத்துறையில் திருப்பி விடவேண்டும். நல்ல கல்வி வேண்டுமென்றால் ஏராளமான செலவு செய்தாக வேண்டும், குறுக்கு வழி இடையாது. கல்விக்காகத் தேசிய வருமானத்தி லிருந்து செலவிடப்படும் தொகை உலகிலேயே இந்தியா வில்தான் மிகவும் குறைவு.

இந்தியாவின் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்த எல்லாரும் கல்வியின் பயனைப் பெறச் செய்ய வேண்டுமானால் பள்ளி வளர்ச்சித் திட்டமொன்றைத் தேசம் முழுவதற்கும் மேற் கொள்ளவேண்டும் அம் மகத் தான இடத்தில் சர்க்கார் அதி காரிகளும், சுயேச்சை ஸ்தாப னங்களும், பெற்றோர்களும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும்.

—நவ இந்தியா

"ஆரம்பக்கல்வி"
ஆபீஸ்,
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income

வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 10 ரூ. 2-50.

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

"பள்ளி ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும்"

[தி. ஜானகிராமன்]

குழந்தைகளின் உள்ளங்களையும் உணர்ச்சிகளையும் உருவாக்கும் அரும்பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் அனைவருக்கும் ஆகாசவாணி வணக்கம் செலுத்துகின்றது. பள்ளி ஆசிரியர்களாகவும், தலைமை ஆசிரியர்களாகவும் நீங்கள் செய்து வரும் பணிக்கு, விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம், கல்வித்திரைப்படம் போன்ற பல துணைகள் பக்க பலமாக உதவி வருகின்றன. இந்தப் பக்கபலங்களில் ஆகாசவாணி ஒன்று என உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். உங்கள் அரு முயற்சிக்குத் துணையாக பல்லாயிரக்கணக்கான கல்வி நிகழ்ச்சிகளை மதராஸ், திருச்சி நிலையங்கள் இதுவரை ஒலிபரப்பி வந்து இருக்கின்றன. இதுவரை என்றால் எத்தனை ஆண்டுகள்? 1938-இல் கல்வி நிகழ்ச்சிகள் தொடங்கின. அதாவது 25 ஆண்டுகள் முடிந்து இப்பொழுது 26-ஆம் ஆண்டு தொடங்குகிறது வெள்ளி விழா வயது முடிந்து விட்டது என்றே சொல்லவேண்டும். இன்னும் சரியாகச் சொல்லப்போனால் இந்த வயதைச் சற்று கூடுதலாகவே சொல்ல வேண்டும். ஏனென்றால் அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை நகராண்மைக் கழகம் ஒலிபரப்பை மேற்கொண்டு நடத்திய காலத்திலேயே பள்ளிகளுக்கெனக் கல்வி நிகழ்ச்சிகளையும் தயாரித்தளித்து வந்தது அகில இந்திய ரேடியோ எடுத்துக்கொண்ட பிறகு கல்வி ஒலிபரப்பு அளவிலும் வகையிலும் பெரிதாக வளர்ந்தது.

ஆசிரியத் துறையில் பழுத்த அநுபவமுள்ள உங்களிடம் கல்விச் சாதனங்களைப் பற்றிக் கூற முன் வருவது அவசியமல்ல. உசிதமும் அல்ல. ஆனால் எந்தெந்த வகையில் ஆகாசவாணி உங்களுக்கு உதவுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் உங்களில் சிலருக்கு, முக்கியமாக, புதிதாக வந்தவர்களுக்கும் உட்புற கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும்—அவ்வளவாகத் தெரியாமல் இருக்கலாம்.

25 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை-திருச்சி வானொலி நிலையங்கள் மாணவர்களுக்காகத் தயாரித்தளித்து வரும் கல்வி நிகழ்ச்சிகள் தினந்தோறும் ஒலிபரப்பாகின்றன. (சனி, ஞாயிறு, தசரா, கிறிஸ்மஸ், கோடை விடுமுறைகளைத் தவிர. நடுத்தரப் பள்ளிகளுக்காக அரை மணி நேரமும் (பகல்-12-30 முதல் 1-00 மணிவரை) உயர்தரப்

பள்ளிகளுக்காக அரை மணி நேரமும் (பிற்பகல் 2-10 முதல் 2-40 வரை) என்று இரண்டு பகுதிகளாக இவை நடைபெற்று வருகின்றன.

இந்நிகழ்ச்சிகளில் தமிழ்மொழி, இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, பூகோளம், குடிமை, இசை, இந்தி, ஸம்ஸ்கிருதம்—போன்ற பலதுறைகள் இடம் பெறுகின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் கற்பிக்கவில்லையா? ரேடியோ எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம். முன் சொன்னதையே மீண்டும் கூறுகிறோம். ரேடியோ உங்களுக்குப்பக்கபலமாக, துணையாகவே இந்த நிகழ்ச்சிகளை அளிக்கிறது. விஞ்ஞானம் எத்தனையோ வியப்புகளைச் சாதிக்கலாம். கல்வித்துறையில் வியப்பூட்டும் பல சாதனங்களை கொணரலாம். கொண்டு வந்தும் இருக்கிறது. ஆனால் இந்த எல்லாச் சாதனங்களும் ஆசிரியரின் இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட முடியாது. அவருக்கு மாற்றாகி விட முடியாது. ஆசிரியரின் நேர் உறவு, வெவ்வேறு மாணவர்களின் ஆற்றலுக் கேற்ப உத்திகளை மாற்றி அவர் கற்பிக்கும் திறன், அவருடைய பரிவு, அன்பு—இவற்றையெல்லாம் புறக்கணித்து, நானே சொல்லிக் கொடுத்து விடுகிறேன் என்று ஒரு சாதனமும் தலைகாட்ட முடியாது. கல்விச் சாதனங்கள் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். ஏற்ற முறையில், ஏற்ற நேரத்தில் ஆசிரியருக்குத் துணை புரிவதுதான் அது. இதைத்தான் ரேடியோ கல்வி நிகழ்ச்சியும் செய்து வருகிறது. எப்படி?

உங்கள் பள்ளிக்கூடத்திற்கு எளிதில் கிட்டாத சில வசதிகள் வானொலிக்கு இருப்பதால் அவற்றைக் கையாண்டு மாணவர்களுக்கு உதவி வருகிறது ரேடியோ. இந் நிகழ்ச்சிகளில் இரண்டு வகையுண்டு. ஒன்று வகுப்பில் நடக்கும் பாடங்கள் சிலவற்றையே, வேறு நோக்கிலிருந்தும், வேறு உத்தி முறைகளைக் கையாண்டும் அளிக்கும் நிகழ்ச்சிகள். இன்னொன்று, வகுப்பில் கற்காத ஆனால் கற்றால் பெரும்பயன் அளிக்கக்கூடிய பல செய்திகளை (இவையும் பாடங்களுக்கு ஒட்டியவைதாம்) சுவைபடத் தயாரித்து அளிக்கும் நிகழ்ச்சிகள். இவ்விரண்டின் நோக்கமும் மாணவர்களின் கற்பனையைத் தூண்டி சுற்றிலும் நோக்கி ஆராயும் ஆற்றலைத் தூண்டி மனத்தை விரிவு படுத்துவதே. கற்றலை ஒரு புதிய அநுபவமாக, இனிய அநுபவமாகச் செய்ய முயலுகின்றன ரேடியோ கல்வி நிகழ்ச்சிகள். இந்தப் பணிக்கு ஒவ்வொரு துறையையும் சேர்ந்த பல நிபுணர்கள் வானொலிக்கு உதவுகிறார்கள். அவற்றை இனிய நிகழ்ச்சிகளாக மாற்ற ரேடியோ அநுபவம் வாய்ந்த பல சிறந்த எழுத்தாளர்கள் உதவுகிறார்கள். நல்ல குரல் படைத்த நடிகர்கள் உதவுகிறார்கள். இவ்வாறுமொழி, கலை, விஞ்ஞானம் என்று பல்

வேறு துறைகளில் பணியாற்றும் நிபுணர்களின் ஒத்துழைப்பினால் நல்ல நிகழ்ச்சிகளை மாணவர்களுக்கென வானொலி அளிக்கிறது. நாடகங்கள், உரைச்சித்திரங்கள், மாணவர்கள் சாதாரணமாக பார்க்கவோ கேட்கவோ முடியாத பலதுறை நிபுணர்களோடு பேட்டிகள், அவர்களுடைய பேச்சுக்கள் இவையெல்லாம் கல்வி நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன.

இந்தக் கல்வி நிகழ்ச்சிகளைப் பற்றி விரிவான குறிப்புகள் அடங்கிய ஒரு சஞ்சிகை—சுவரொட்டியுடன், ரேடியோ கருவி உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் இலவசமாக அனுப்பப்படுகிறது. ஜூலை முதல் வார வாக்கில் அது உங்கள் கைக்குக் கிடைக்கலாம். தலைமை ஆசிரியரும் மற்ற ஆசிரியரும் கூடி அமர்ந்து அதை ஒரு முறை நன்கு படித்துப் பார்த்தால் கல்வி நிகழ்ச்சிகள் உங்களுக்கு எவ்வளவு தூரம் துணை செய்கின்றன என்று தெரியும். இந்த சஞ்சிகையை வைத்துக் கொண்டு எந்தெந்த நிகழ்ச்சிகளை மாணவர்கள் கேட்கலாம் என்று நீங்கள் முன் கூட்டியே ஓர் ஏற்பாடு செய்து கொள்ளலாம். எல்லா நிகழ்ச்சிகளையும், எல்லா மாணவர்களும் கேட்கவேண்டும் என்ற அவசியமில்லை. அதற்கான நேரமோ, வசதியோ உங்கள் பள்ளியில் இல்லாமல் இருக்கலாம். எனவே வெவ்வேறு நிகழ்ச்சி வரிசைகளை வெவ்வேறு மாணவர்கள் கேட்குமாறு செய்யலாம். ஒரு விஞ்ஞான வரிசையை ஒரு பிரிவு மாணவர்கள் கேட்கட்டும். இலக்கிய வரிசையை இன்னொருபிரிவு மாணவர்கள் கேட்கட்டும். வரலாற்று வரிசைக்கு ஒரு பிரிவு மாணவர்கள். பூகோளத்திற்கு இன்னொரு பிரிவு. இப்படி அமைத்துக் கொண்டால் உங்கள் வேலை நெருக்கடியை மேலும் நெருக்கடி ஆக்காமல் கல்வி நிகழ்ச்சிகளைப் பயன்படுத்த முடியும். சில பள்ளிகளில் டேப் பதிவுக் கருவிகள் இருப்பதாகத் தெரிகிறது. அத்தகைய பள்ளிகளில் முக்கிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பு நேரத்தில் பதிவு செய்து கொண்டு பிற்பாடு நேரம் வாய்க்கும்பொழுது மாணவர்கள் கேட்குமாறு செய்யலாம்.

ஆங்கிலம் போன்ற சில நிகழ்ச்சிகள் மாணவர்களுக்குச் சிற்சில இடங்களில் புரியாமல் இருக்கலாம். ஆனால் மூன்று நான்கு நிகழ்ச்சிகளை தொடர்ந்து கேட்ட பிறகு இந்தக்கஷ்டம்தோன்றாது. மேலும் இந்த நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு எழுத்தும் புரியவேண்டும் என்ற அவசியமில்லை. நல்ல உச்சரிப்பையும், பேசும் முறையையும் அடிக்கடி கேட்டுப் பழகுவதே ஒரு சிறந்த அனுபவமாகும்.

கல்வி நிகழ்ச்சிகள் மற்ற நிகழ்ச்சிகளினின்றும் சற்றுவேறுபட்டவை. நிகழ்ச்சி தொடங்குவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு ஆசிரியர் அதைப்பற்றிச் சுமார் ஐந்து நிமிடநேரம் மாண

வர்களுக்கு எடுத்து உரைத்தால் நல்லது. இப்படி மாணவர்களைத் தயார் செய்வது நல்ல பயனளிக்கும். நிகழ்ச்சியைக்கேட்ட பின்பு உரையாடல், கேள்விகள், சிறு நாடகம்—கட்டுரை வரைவது முதலிய பல முயற்சிகளைக் கையாளுவதால் நிகழ்ச்சியைக் கேட்ட பயன் முழுமை பெறும். இதற்கான குறிப்புக்கள் கல்வி ஒலிபரப்பு சஞ்சிகையில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. அதைப் பார்க்குமாறு வேண்டுகிறோம்.

ஜூலை மாதம் 8–ஆம் தேதி அன்று 1963–64க்கான கல்வி நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. இந்நிகழ்ச்சிகளின்வெற்றி உங்களுடைய ஒத்துழைப்பையே பொறுத்திருக்கிறது. உங்கள் அபிப்பிராயங்களை அவ்வப்பொழுது நிலையத்தினர்க்குத் தெரிவித்தால்தான் நிகழ்ச்சிகளின் தரத்தை மாற்றி அமைக்க சௌகரியமாய் இருக்கும். மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தயக்கமின்றி மனம்விட்டு நீங்கள் சொல்லுவதையே நாங்கள் வேண்டுகிறோம் வரவேற்கிறோம். நிலையத்தினரோடு நீங்கள் ஒழுங்கான கடிதப் போக்கு வைத்துக் கொள்வது எங்களுக்கு எத்தனையோ உதவியாய் இருக்கும். கல்வித் துறையில் ரேடியோ ஒரு முக்கியமான பணியாற்றி வருவதால் உங்கள் கடிதங்களும், கருத்துகளும் கல்வித் துறைக்குச் செய்த ஒரு பணியாகவே இருக்கும்.

ரேடியோ கருவி இருந்தும் கல்வி ஒலிபரப்பு சஞ்சிகை வராத பள்ளிக்கூடங்கள் உடனே எங்களுக்கு எழுதிப் பதிவு செய்து கொண்டால் சஞ்சிகையை அனுப்ப முடியும். நிலைய நிர்வாகி, ஆகாசவாணி, மதராஸ்–4 என்ற முகவரிக்கு எழுதவும். எழுதும் பொழுது உங்கள் ரேடியோ செட்டின்பெயர், எண், அனுமதி எண் ஆகியவற்றையும் குறித்து எழுதவும்.

—வானொலி

பைபிளின் விலை ரூ. 5 லட்சம்

லண்டன், ஆக. 30 — 1649–ம் ஆண்டில் பிரிட்டனின் முதலாம் சார்லஸ் மன்னர் தூக்குமேடைக்குச் சென்றபோது எடுத்துச் சென்ற பைபிளை ரூ. 4 லட்சத்து 80 ஆயிரம் விலை கொடுத்து வாங்க அமெரிக்க நூல் நிலையம் முன்வந்துள்ளது.

இந்த பைபிள் 1629–ம் ஆண்டில் கேம்பிரிட்ஜில் அச்சிடப்பட்டதாகும். தோலினால் பைண்ட் செய்யப்பட்ட இந்தப் புத்தகம் இன்னும் நல்ல நிலையில் உள்ளது.

இப்போது இது பிரிட்டனில் லெஸ்டர்ஷயரிலுள்ள பேராசிரியர் ஆலன் லெட்டன் பிராக் என்பவருக்குச் சொந்தமானதாக உள்ளது.

ருசிகரத் தகவல்

—துரை. முருகேசன்—

இரு கை எழுத்தாளர்கள்!

கையே வாழ்க்கை. எப்படி? உழைக்க உதவும்—உணவு எடுத்துக் கொடுக்கும்—உடை உடுத்தும்—எண்ணத்தைக் கருத்தோவியங்களாய் சிங்காரச் சிற்பங்களாய், சிந்தைகவரும் சிலைகளாய் வடித்துக் கொடுக்கும். வாழ்க்—கை சிறக்க கை பல விதங்களில் நமக்குப் பயன் தருகின்றது.

சிறப்பு மிக்க கையால் புகழ் பெற்றோர் பலர். ஒரு கையால் ஒரு எழுத்துக்கூட எழுதமுடியாமல் தவிப்போர் பலர் இருக்கையில், இரு கைகளால் ஏக காலத்தில் இரண்டு எழுதுகோல்களைப் பிடித்துக்கொண்டு இரண்டு வெவ்வேறு மொழிகளில் எழுதும் திறமை படைத்தவர்கள் இருந்தார்கள் என்றால் வியக்காமல் இருக்க முடியுமா?

1465 முதல் 1515வரை வாழ்ந்த பிரான்ஸிஸ்கோ மரியாகிராபால்டோ என்ற இத்தாலிக் கவிஞர் ஏககாலத்தில் இரு கைகளாலும் வெவ்வேறு கவிதைகளை எழுதுவார். ஜேம்ஸ் கார் பீல்ட் என்ற அமெரிக்க ஜனாதிபதி ஒரு கையால் கிரீக் மொழியிலும், மற்றொரு கையால் லத்தீன் மொழியிலும் ஒரே சமயத்தில் எழுதும் ஒப்பற்ற திறமை மிக்கவராக விளங்கினாராம்.

கீரையின் கீர்த்தி!

கீரையில் கீர்த்தி மிக்கது பசலை. ஏன் தெரியுமா? இது பூலோக அமிர்தம். இளமையும், கட்டுடலும், வனப்பும் வேண்டுவோர் இதை விரும்பிச் சாப்பிடுவர். டாக்டர் காகுஜி யோஷிடா என்ற ஜப்பானியர் ஆறுவருடகாலத்தில் 8280 பவுண்டு—அதாவது தினசரி மூன்று பவுண்டு வீதம் பசலைக் கீரையைச் சாப்பிட்டு இறுதி வரை இளமையோடு, நல்வாழ்வு பெற்று வாழ்கின்றார்.

அடேயப்பா!

1811–1817-ல் இருந்த புகழ் மிக்க பிரிட்டிஷ் கட்டட நிபுணரான சர். கில்பர்ட் ஸ்காட் என்பவர் தம் வாழ்நாளில் 16 கல்லூரிகள், 27 பொது உபயோகக் கட்டடங்கள், 26 பள்ளிக்கூடங்கள், 23மடங்கள், 38 கதிட்ரல்கள், 474 சர்ச்சுகள், 58 நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றைக் கட்டியுள்ளாராம்!

டி. டி. டி. (D. D. T.)

இப்பெயரைப் பலர் கேட்டிருக்கலாம். இது பூச்சி வகைகளைக் கொல்லும் மருந்தாகும். டி. டி. டி. என்பதன் முழுப்பெயர் என்ன தெரியுமா? "டிக்குளோரா-டிபெனில்-டிரைகுளோ ரோதீன்" (Dichloro-diphenyl-trichloroethen) என்பதாகும். இதை முதன் முதலில் 1874-ல் "ஒத்மார் செய்ப்லர்" என்பவர் கண்டு பிடித்தார்.

தீக்கோழி

கல், கண்ணாடி, ஆணி முதலியவற்றைக் கூடத் தின்று விடுவதாகச் சொல்லப்படும் அதிசயப் பறவைதான் தீக்கோழி. இது சுமார் ஏழு அடி உயரம் வளரும். சராசரி எடை 120 ராத்தல். ஆண் பறவைகளும் சில சமயங்களில் அடைகாக்கும். இதன் முட்டைகள் சிறு தேங்காய் அளவு இருக்கும். அரேபியா, ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா பாலைவனங்களில் வசிக்கின்றன. இதன் முட்டையை உடைத்து, அதைக் கிண்ணம் போல் பயன்படுத்துவதுண்டாம்! தீக்கோழி சுமார் 50 (ஐம்பது) ஆண்டுகள் வாழுமாம்.

பெரிய குடும்பம்!

வாழைக் குடும்பத்தில் 65 வகை சாதிகளும், 150 இனங்களும், இஞ்சியில் 45 சாதிகளும், பூசனியில் 90 சாதிகளும் 800 இனங்களும், அவரையில் 600 சாதிகளும், 12,000 இனங்களும், கீரையில் 40 சாதிகளும் 500 இனங்களும் உள்ளன. பருத்தியில் 80 சாதிகளும்; கத்தரியில் 1500 வகை இனங்களும் உள்ளனவாம்!

நீர் நாய்!

இது ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா அமெரிக்கப் பகுதிகளில் காணப்படும். இது நான்கு அடி நீளமும் ஓரடி உயரமும் இருக்கும். நத்தை, புழு, பூச்சி, தவளை, மீன் ஆகியவையே இதன் உணவாகும். ஒரு தடவைக்கு இரண்டு அல்லது மூன்று குட்டிகள் போடுமாம்.

"கோபாலகிருஷ்ண கோகலே"

[ரா. வீழிநாதன்]

"அண்ணா!"

"என்னடா?"

"வாத்தியார் வீட்டில் போட்டு வர இரண்டு கணக்குகள் கொடுத்திருக்கிறார், அண்ணா! போட்டுப் பார்க்கிறேன். தவறு இல்லாமல் போட வரவில்லை, அண்ணா!"

"அதற்கு என்னை என்னடா செய்யச் சொல்லுகிறாய்?"

"கொஞ்சம் போட வழி சொல்லிக் கொடு அண்ணா!"

அண்ணனுக்குப் பயம், தானும் "போடத் தெரியாமல் திண்டாடுவோமோ? தவறாகப் போட்டு விடுவோமோ?" என்று. அதனால் தட்டிக் கழிக்கப் பார்க்கிறான். எனக்கு வேறு வேலை யில்லையோ? என்று கடிந்து கொள்ளுகிறான்.

தம்பி சிணுங்குகிறான். "கணக்குகளைப் போட்டுக் கொண்டு போகவில்லையென்றால் உபாத்தியாயர் அடிப்பாரே அண்ணா!" சொல்லும்பொழுதே உபாத்தியாயரின் பிரம்படி நினைவுக்கு வருகிறது. அதோடு அழுகையும் வந்து விடுகிறது.

அண்ணன் தம்பியை அழவிட்டு வேடிக்கை பார்ப்பவன் இல்லை. எனவே, பலகையை எடுத்து வைத்துக்கொண்டு தம்பியின் இரண்டு கணக்குகளையும் போட முயல்கிறான். கணக்குகள் அவன் வகுப்புக்கே சிறிது கஷ்டமான கணக்குகள்தான். எனவே, ஏறக்குறைய ஒருமணிநேரம் அழித்து அழித்துச்சரியாகப் போட்டு விடுகிறான். அது மட்டுமா? தன் தம்பிக்குப் புரியும்படியாக விளக்கிக் கூறுகிறான். அதைப் பார்த்து நோட்டில் முத்து முத்தாக அடித்தல் திருத்தல் ஏதுமின்றித் தம்பி எழுதிக்கொள்கிறான்.

இதே சமயம் கணகணவென்று பள்ளிக்கூடத்து முதல் மணி அடிக்கும் சப்தம் கேட்கிறது.

தெருக்கோடியில் தான் பள்ளிக்கூடம். அன்னை சொற்படி வைகறைத் துயில் எழுந்து, காலைக் கடன்களையும் குளியல் உணவு ஆகியவற்றையும் காலத்தில் முடித்துக்கொண்டு, பள்ளிக்குப் போகும்வரை படிப்பவர்கள் அண்ணன் தம்பி இருவரும்.

மணி ஓசைகேட்டதும் புத்தகக்கட்டுகளைத் தூக்கிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்கு விரைகின்றனர். வகுப்பில் அவர்கள் நுழையவும் வகுப்புத் தொடங்குவதற்கான மணி அடிக்கவும் சரியாக இருக்கிறது.

சட்டாம்பிள்ளை அதாவது மானிட்டர் பையன்களுடைய நோட்டுகளையெல்லாம் சேகரித்து

உபாத்தியாயர் மேஜைமீது வைக்கிறான். உபாத்தியாயரும் வந்தவுடன் ஒவ்வொரு நோட்டாகப் பார்க்கிறார். ஒருவன் கணக்குப் போடவே இல்லை. இன்னொருவன் போட முயன்றிருந்தான். மற்றொருவன் போட்டிருந்தான். ஆனால் தவறாக. இப்படியாக ஒரு பையனைத் தவிர மற்றவர்களெல்லாம் சரியாகப் போடாமற் போகவே, உபாத்தியாயருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

எழுந்திருக்கிறார். கையில் பிரம்பை எடுத்துக்கொள்கிறார். ஒவ்வொரு மாணவனையும் கையை நீட்டச் சொல்லி 'சுர்' என்று ஒன்று கொடுத்துப் பெஞ்சியின் மீதும் ஏறி நிற்கச் சொல்கிறார்.

வலி பொறுக்க முடியாமல் கையைப் பிசைந்து கொண்டு கண்களில் நீர் முத்திடப் பையன்கள் பதில் பேசாமல் பெஞ்சியில் ஏறி நிற்கிறார்கள்.

சரியாகப் போட்டிருந்த பையனின் அருகில் வந்ததும், அவன் முதுகைத் தட்டிக்கொடுத்து "சபாஷ்! நீதான் கெட்டிக்காரன்!" என்கிறார். மற்றப் பையன்களைப் பார்த்து "முட்டாள்கள்! உங்களைக் காட்டிலும் இவன் எவ்வளவு சிறியவன்? இவன் போட்டு வந்திருக்கும் பொழுது உங்களுக்கு மட்டும் என்ன கேடு?" என்று கடிந்துகொண்டே தம் ஆசனத்துக்குச் செல்கிறார்.

கணக்கைச் சரியாகப் போட்டு வந்த பையனும் விசித்து விசித்து அழலானான். உபாத்தியாயர் வியப்புடன் திரும்பிப் பார்க்கிறார். "உன்னை நான் அடிக்கவில்லையே! எதற்காகடா அழுகிறாய்?" என்று கேட்கிறார்.

பையனின் அழுகை இன்னும் வலுக்கிறது. அவனுக்குத் தன் தாயார் சொன்ன சொற்கள் நினைவுக்கு வருகின்றன. "எப்பொழுதும் உண்மை பேசு. பிறருக்குத் தீங்கு நினையாதே!" என்றுதான் அவள் எனக்குச் சொல்லிக் கொடுத்தவை.

"நாமாக இந்தக் கணக்கை எங்கே போட்டோம்? அண்ணாவல்லவா, சரியாகப் போட்டுக் கொடுத்தார்? நான் போட்டதாக எண்ணியல்லவா உபாத்தியாயர் என்னைத் தட்டிக்கொடுத்தார். உண்மையில் நானும் மற்றப் பையன்களைப்போலப் போடாமல் இருந்தால் அல்லது தப்பாகப் போட்டிருந்தால் எனக்கும் இந்த அடி விழுந்திருக்கவேண்டும்? பெஞ்சு மேல் ஏறி நிற்கும் தண்டனை கிடைத்திருக்கவேண்டும். எல்லாப் பையன்களுமே சரியாகப் போடவில்லை யென்பதற்காக உபாத்தியாயர் ஒருவேளை தண்டனையே கொடுக்காமல் கணக்கைச் சொல்லிக் கொடுத்திருப்பார். என்னால்தான் இந்தப் பையன்கள் அடிபட்டார்கள். 'அண்ணாவின் உதவி கொண்டு இந்தக் கணக்கைப் போட்டு, நாம் பிறருக்குத் தீங்கு விளைத்துவிட்டோம்' என்று எண்ணி அழலானான். அந்த

அழுகையினூடே "சார்!. என்னையும் அடிக்கவேண்டும். பெஞ்சியில் ஏற்றி நிறுத்திவைக்க வேண்டும்!" என்றான்.

"சரியாகப்போட்டவனுக்குத் தண்டனை கொடுப்பதுண்டா?"

"இதை நான் போடவில்லை சார்! என் அண்ணு போட்டுக் கொடுத்தார்!" என்று நடந்ததை நடந்தவாறே கூறுகிறான்.

உபாத்தியாயருக்கு அவன் உண்மை உரைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. அடித்த அடியை வேண்டுமானுல், அவரால் திருப்பி வாங்கிக்கொள்ள முடியவில்லையே ஒழியப் பையன்களைப் பெஞ்சியிலிருந்து இறங்கி உட்காரப் பணித்துவிட்டார். அதோடு அந்தச் சிறு பையனைத் தடவிக் கொடுத்து, "உண்மை உனக்கு உயர்வு தரும், உண்மையைக் கைவிடாதே!" என்று கூறி ஆசிர்வதிக்கிறார்.

உண்மையில் பலம் கொண்டு உயர்ந்த இந்தப் பெரியார் யார், தெரியுமா? மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த கோபாலகிருஷ்ண கோகலே என்பவர்தான். நம் நாடு இன்று சுதந்தரம் பெற்றுச் சீரும் சிறப்புமாக விளங்கக் காரணமானவர் இவர். சொல்லப்போனுல் நம் நாட்டுச் சுதந்தரச் சிற்பிகளில் இவர் மிக மிக முக்கியமானவர். காந்தியடிகளுக்கு முதற்கொண்டு அரசியல் குருவாகத் திகழ்ந்தவர் கோபாலகிருஷ்ண கோகலே.

—வானெலி

(41-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிகள் அவரைத் துதிபாடினர். பல பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்திருக்கின்றன. பல நகர்கள் சுதந்திரப் பிரஜை தகுதி அளித்து பெருமை செய்தன.

1939–ல் ராயல் சங்க அங்கத்தினராகவும், 1943–ல் ராயல் வைத்தியக் கல்லூரி அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நப்பீல்டு பிரபு தமது 26–வது வயதில் எலிசபெத் மௌத் அனஸ்லேயைத் திருமணம் செய்து கொண்டார். இவருக்குக் குழந்தைகள் கிடையாது. யாத்திரை செல்லுவதில் அதிக விருப்பம் கொண்டவர்.

பணம் கோடி கோடியாக இருந்தும் சுமார் 14 வருடங்களாகத் தூக்கமில்லாது கஷ்டப்பட்டார். இரவில் ஒரு மணி நேரத்துக்கு மேல் இவரால் தூங்க முடியாது. "தூங்கக் கற்றுக் கொடுப்போருக்கு லட்சம் பவுன் பரிசளிப்பதாக" இவர் வேடிக்கையாகக் கூறுவதுண்டு.

நப்பீல்டு ஸ்தாபனம் இந்திய ஸ்தாபனங்கள் பலவற்றுக்கும் தாராளமாக நன்கொடை வழங்கியுள்ளது.

—"நவ இந்தியா"

ஈவதில் இன்பம் கண்ட நப்பீல்டு பிரபு!

உழைப்பால் உயர்ந்த கோடீஸ்வரர்

சுய முயற்சியில் சுமார் 35 வருடங்களில் 3 கோடி பவுன் (சுமார் ரூ 4) கோடி) சம்பாதித்துத் தானமளித்த நப்பீல்டு பிரபுவைப் போல் தாராள குணம் கொண்ட தொழில் அதிபர்கள் பிரிட்டிஷ் தொழில் வரலாற்றில் வேறு யாருமில்லை. உலகக் கொடை வள்ளல்களில் நப்பீல்டு பிரபுவும் ஒருவராவர்.

வோர்செஸ்டரில் 1877-ல் பிறந்த இவரின் இயற்பெயர் வில்லியம் ரிச்சர்டு மோரிஸ். ஆக்ஸ்போர்டின் சுற்றுப்புற நகரான கௌலேயில் சுமாரான கல்வியறிவு பெற்றார்.

தந்தை விட்டுப் பின் தோட்டத்தில் தனது 14-வது வயதில் சைகிள் பழுது பார்க்கும் தொழிலில் இறங்கிய இவர் இதனை ஏணியாக வைத்து மோட்டார் தொழில் துவக்கி எதிர் காலத்தில் பெரும் பொருள் குவித்தார்.

வாரத்துக்கு 5 ஷில்லிங் (சுமார் ரூ. 3,) பெறும் வேலை கற்கும் பயிற்சியாளராகச் சில மாதங்கள் பணியாற்றினார். வாரக் கூலியில் 1 ஷில்லிங் உயர்த்தக் கோரினார். கிடைக்காமற் போகவே சுயமாகத் தொழில் ஆரம்பித்தார்.

அவருடைய ஆரம்ப மூலதனம் 5 பவுன் (சுமார் ரூ. 65) சைகிள் வாடகைக்கு விடுதல், விற்றல், பழுது பார்த்தல் இது அவருடைய வியாபாரம். சைகிள் போட்டிகளில் கலந்து கொள்வார். அப்படிக் கலந்து கொண்டு சாம்பியன்ஷிப் பரிசு 7 பெற்றிருக்கிறார். காலப் போக்கில் மோட்டார் சைக்கிள்கள் பழுது பார்ப்பதிலும் ஈடுபட்டார்.

10 வருடங்களில் போர்டுகார் மாதிரி, ஆனால், விலையில் அதனுடன் போட்டியிடக் கூடிய விகிதத்தில் ஒரு காரை உற்பத்தி செய்தார். 1912-ல் கௌலேயில் தொழிற்சாலையை நிறுவினார். முதல் தடவையாக 500 கார்கள் உற்பத்தி செய்தார். 1925-ல் 48,712 கார்கள் உற்பத்தி செய்தார். 1931-ல் வில்லியம் மோரிசின் தொழிற்சாலை கார் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்று என்ற நிலைக்கு உயர்ந்துவிட்டது.

பாராட்டு

1929 ல் அரசாங்கம் 'பரோனட்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அடுத்த 1934-ல் பிரபு வானார். பிரிட்டிஷ் நாட்டுப் பெரும் பணக்காரர்களில் ஒருவ

தான நப்பீல்டு பிரபு பணத்தைச் செலவு செய்வதில் எளிமையானவர். “புத்திசாலித்தனமாகச் செலவு செய்வதை விடப் பணத்தைத் தேடுவது சுலபமானது” என்ற கொள்கையுடையவர்.

35 வருடங்களில் எவ்வளவு விரைவாகப் பணத்தைக் குவித்தாரோ அவ்வளவு விரைவாகவே அதனை நல்ல காரியங்களுக்காகச் செலவும் செய்தார். ஏழை எளியவர்களுக்குத் தான் திரட்டிய பணம் உபயோகமாவதில் அதிக ஆனந்தம் கண்டார்.

கொடி தின நிதி திரட்டும் பெட்டியில் ஒரு தடவை 1 லட்சம் பவுன் செக்கைப் போட்டார். இவ்வளவு அதிக தொகை யாரும் கொடுத்திருக்க மாட்டார்கள். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்துக்கு 177 லட்சம் பவுன் வழங்கியுள்ளார்.

நப்பீல்டு ஸ்தாபனத்துக்கு 1943–ல் 1 கோடி பவுன் வழங்கினார். தனிப்பட்ட ஒருவர் நன்கொடையாக இவ்வளவு பெருந் தொகை வழங்கித் தனியான இடம் பெற்றார்.

மருத்துவ ஆராய்ச்சிக்கு முதலிடம் அளிக்கப்பட்டது.

1904–ல் நிறுவப்பட்ட மோரிஸ் காரேஜஸ் லிமிடெட்டின் லாபம் முழுவதையும் குருடு செவிடு ஊமைகளுக்காக 1961ல் ஒதுக்கினார்.

எளிய வாழ்வு

தன்னைப் பொறுத்த மட்டில் கடைசி வரை எளிமையாகவே வாழ்ந்தார். சாதாரணமாக லட்சாதிபதிகள் சாதாரண மக்களிலிருந்து வேறுபட்டு விளங்குகிறார்கள். ஆனால் நப்பீல்டு பிரபு அப்படியல்ல. பொதுவாக மக்களில் ஒருவராகவே விளங்கினார்.

லட்சம் லட்சமாகப் பணம் கொட்டிக் கிடந்தும் அவர் ஆடம்பர வாழ்வில் அடியெடுத்து வைக்கவில்லை. பொதுவாக எல்லோரும் உபயோக்கும் சாதாரண சிகரெட்டுகளையே அவர் பயன்படுத்தினார். அவர் சிகரெட்டு புகைக்கும் பாணிகூடப் பொதுவானதே.

1962–ல் கூட 25 வயதான “பாபி” என்ற காரைத்தான் ஓட்டி வந்தார். அவருடைய தொழிற்சாலையில் உருவான இந்த பாபி 25 வயதாகியும் புதுமை மெருகு குன்றாது விளங்கியது குறிப்பிடத் தக்கது. அதனுடைய அப்போதைய விலை 30 பவுன்.

பேதம் பாராட்டாதவர்

இவருடைய தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு இலவச உணவு வழங்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் நப்பீல்டு பிரபுவும் அவர்களுடன் ஒன்றாக உணவருந்துவார். “முதலாளி எங்களில் ஒருவர்” எனத் தொழிலா

(39–ம் பக்கம் பார்க்க)

நமது உயரிய இலட்சியங்களின் பாதுகாவலர்கள் ஆசிரியர்களே

ஆசிரியர் தினத்தை ஒட்டித் துணைத்தலைவர் உரை.

புதுடில்லி செப்—5.

ஆசிரியர்களின் கடமை ஆதிக்கம் செலுத்துவதோ, அதிகாரம் பண்ணுவதோ அல்ல என்றும், அவர்களுடைய முழுமுதற் கடமை சேவை செய்வதுதான் என்றும் உப-ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் உசேன் இன்று கூறினார்.

எல்லையற்ற பொறுமையுடனும், நல்லெண்ணத்துடனும், சமூகத்தை உருவாக்க வேண்டுமென்றும், சுருங்கக் கூறின், ஆசிரியர் மக்கள் சேவகராகவும், தலைவராகவும் விளங்க வேண்டுமென்றும் உபராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் உசேன் அகில இந்திய ரேடியோ மூலம் ஆசிரியர்களுக்கு விடுத்துள்ள செய்தியில் இன்று கூறினார்.

ராஷ்டிரபதியின் பிறந்த தினமாகிய செப்டம்பர் 5-ம் தேதியை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமாகும் என்று அவர் கூறினார். ஆசிரியர் பணியின் முக்கியத்துவத்தையும் பெருமையையும் அவர்களுக்கு உணர்த்தவும், இந்தியாவின் பாரம்பரியத்துக்கு ஏற்ப இந்திய ஆசிரியர்களுக்கு எவ்வளவு பெருமை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்கவும். மிகவும் உயரிய ஆசிரியர் ஒருவர் இந்திய நாட்டின் அதிபராக இருப்பதைவிட வேறு என்ன நிகழ்ச்சி வேண்டும்? என்று அவர் அச் செய்தியில் குறிப்பிட்டார்.

இந்த மகிழ்ச்சிகரமான தினம் ஆசிரியர் எல்லாருக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகுமென்று உபராஷ்டிரபதி தெரிவித்தார். இத்தினத்தின் போது, ஆசிரியர்கள் தேசியப் பெருமையை நிலைநாட்டும் உற்சாகமான பணியில் ஈடுபட்டிருக்கிற மக்களுக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டுள்ளோம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நமது மக்கள் போற்றிப் பேணிவரும் உயரிய இலட்சியங்களின் பாதுகாவலர்கள் ஆசிரியர்களே.

நல்லாசிரியர் உயர்ந்த சமூகவாதியாகவும் இருக்க வேண்டும். தத்துவவாதிகளும் சிந்தனையாளர்களும் மனிதாபிமானிகளும் அதிகாரத்தை நாடுபவர்களும், பொருளாதார நிலையைத் தேடுபவர்களும் சமூகவாதிகளும் இருக்கின்றனர். தத்துவவாதியின் உயர்ந்த லட்சியம் மெய்மையைக் கண்டுபிடிப்பது; சிந்தனையாளரின் இலட்சியம் அழகை உணரு,

வது. மதாபிமானி மோட்சத்தை நாடுகிறார். அதிகாரத்தை நாடுபவர் ஆதிக்கத்தை விரும்புகிறார். பொருளாதார நல வாதி லாபம் பெறுவதில் கவனம் செலுத்துகிறார். சமூகவாதி அன்பையே நாடுகிறார். ஆசிரியர் இந்த சமூக வாதிகளின் இனத்தைச் சேர்ந்தவர்.

ஆசிரியர்களின் பணி இளைஞர்களின் தேவையையும், திறமையையும் புரிந்து கொண்டு அவர்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதாகும்.

ஆசிரியர்கள் தமது சகோதரர்கள் என்பதாக உரிமை பாராட்டி உப-ராஷ்டிரபதி, ஆசிரியர்களை எதிர்நோக்கி இருக்கிற கடும் பணியை உறுதியுடன் நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நாம் ஏதாவதொரு வேலையைச் செய்து பிழைக்கின்ற கூலிக்காரர்களல்ல; அறிவுச்சுடரைப் பரப்பி நாட்டு மக்களின் சுமையைக் குறைக்க வேண்டும். உயரிய இலட்சியங்களை ஊட்ட வேண்டும். சமூகப் பொறுப்புகளை ஏற்க வேண்டும்.

ஆசிரியர்களின் பொருளாதார நிலையைவிட அவர்களுடைய சேவா உணர்ச்சியே அதிக உற்சாகத்தை அளிக்குமென்று டாக்டர் ஜாகிர் உசேன் வலியுறுத்தினார்.

நாடு முழுவதும் பரவியிருக்கிற ஆசிரியர்கள், இந்நாட்டை அறிஞர்கள் வாழவும், வேலை செய்யவும், தியானம் செய்யவும் பெரிய சிந்தனைகளில் ஈடுபடவும் நமது தாய்நாட்டிற்குப் பெருமை தரவும் மாற்றி யமைக்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்றும் உப-ராஷ்டிரபதி கேட்டுக்கொண்டார்.

(58-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியரும் உணரும்படிச் செய்ய வேண்டும்; எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதையும் உணரவேண்டும். இந்தப் புனித உணர்வை வளர்ப்பதற்காகத்தான் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. அத்தினம் ராஷ்டிரபதியின் பிறந்த தினமாகவும் இருப்பது மிகவும் பொருத்தமானதாகும். ஆசிரியர்களிடம் அன்பையும் மரியாதையையும் செலுத்தவேண்டும் என்பதைப் பெற்றோரும், சமூகமும் இந்நாளில் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் இளம் மாணவர்களும் அந்த மனப்போக்கைப் பெறுவார்கள். எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கிருக்கிற உயரிய பங்கைப் பாராட்டும் வகையில் ஆசிரியர் நல்வாழ்வு நிதிக்குத் தாராளமாக உதவவேண்டும்.

— **தினமணி**

பிச்சைக்காரர்களே இல்லாத பூடான் நாடு

பாட்டியாலா, ஆக 18—

பூடானில், மற்ற நாடுகளில் இருப்பது போல் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. அபிவிருத்தி வேலைகளில் வேலை செய்ய ஆட்களைக் கட்டாயப் படுத்தி வேலைக்குச்சேர்க்கவேண்டிய நிலைமைதான் இருக்கிறது.

இங்கு சென்ற வாரம் வந்திருந்த பூடானின் கல்வித்துறை இயக்குநரான தவா செரிங், நேபளுக்கு அளித்த சிறப்புப்பேட்டியின் போது மேற்கண்ட விவரத்தைக் கூறினார்.

பூடானில் வயது வந்தோர் ஒவ்வொருவரும் ஆண்டில் 70 நாட்கள் அரசாங்கத்துக்குச் சட்டப்படி தன் உழைப்பைக் கொடுத்தாக வேண்டும் என்று அவர் கூறினார். பூடானில் ஆட்பஞ்சமிருப்பதால் பூடான் மக்கள் ஒரு நாளில் 12 மணி நேரம் வேலை செய்கின்றனர்.

7.5 லட்சம் மக்கள் வாழக் கூடிய பூடானில் எவ்விதமான கடுமையான பொருளாதாரப் பிரச்சினையும் இல்லை என்று அவர் தெரிவித்தார். ஆசியாவின் மற்ற நாடுகளைப் போலல்லாது எப்போதுமே பூடான் செழிப்பாகவே இருந்து வந்துள்ளது என்றும் பிச்சைக்காரர்கள் அங்கு ஒருபோதுமே இருந்ததில்லை என்றும் அவர் கூறினார்.

உழுது பயிரிட எந்த அளவும் நிலம் பெறலாம்

எவ்வளவு நிலத்தில் உழுது பயிரிட முடியுமோ அவ்வளவு நிலத்தைப் பூடான் மக்கள் வைத்துக் கொள்ளலாம். சாதாரண விவசாயிகள் மூன்றடுக்குக் கட்டிடங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் வீட்டு வாசலில் பசித்து நின்ற எவரையும் தான் கண்டதில்லை என்று அவர் கூறினார்.

பூடானின் மக்கள் தொகையில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமானவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள். அரிசி, கோதுமை, மற்றும் இதர தானியங்களைத் தங்களுடையதேவைக்கும் அதிகமாகவே அவர்கள் விளைவிக்கின்றனர். தங்களுடைய உபரி—உற்பத்தியைத் திபேத்துக்கு அவர்கள் விற்கின்றனர். அவரவர் வேலையை அவரவர்களே செய்துகொள்கின்றனர். கூலி வேலைக்காரர்களை அங்கே பார்ப்பது அரிது.

பூடான் பல நூற்றாண்டுகளாக மற்ற நாடுகளைவிட்டு ஒதுங்

(47-ம் பக்கம் பார்க்க)

ஆசிரிய நிர்வாகி

திருமிகு. S. இராமானுஜய்யா அவர்களின்

வாழ்க்கை வரலாறு.

தொன்மைக் கவின்மிகு தொண்டை மண்டலத்துள் உயர் தனிச் சிறப்புடன் இலங்குவது வந்தவாசி என்னும் ஊர். அதனை யடுத்த முனுகப்பட்டு என்னும் சிற்றூரில் திரு. சேஷய்யா—அலர்மேலு அம்மாள் தம்பதிகளின் எட்டாவது பிள்ளையாக ஸ்வஸ்தி ஸ்ரீ சோபகிருது வருஷம் ஆவணித் திங்கள் 4-ம் நாள் குருவாரம் துவாதசி புனர்பூசம் கூடிய கற்கடக லக்கினத்தில் (20—8—1903) பிறந்தார். அவ்வூர்த் துவக்கப் பள்ளியில் நான்காம் வகுப்புவரை பயின்று 8—11—1916-ல் தேர்வுச் சான்றிதழ் பெற்றார்.

இனி, வடார்க்காடு மாவட்டம் வேலூர் சைதாப்பேட்டையில் தனதுவம்சத்தார்களுள் சிறந்தவரான உயர்திரு ஊ. இராமானுஜய்யா அவர்களால் 1795-ஆம் ஆண்டில் ஓர் ஆரம்பப் பாடசாலை ஏற்படுத்தப்பட்டது. திருவாளர்கள் வீரசாமி ஐயர், திரு. வேங்கடய்யா, சீனிவாசய்யா ஆகியோர்களால் 1888-ஆம் ஆண்டுவரை நடைபெற்று வந்தது. 1889—1915-ஆம் ஆண்டுவரை திருவாளர் நம்பெருமாளய்யா அவர்களால் நடைபெற்றுவந்து, 1916-ஆம் ஆண்டு முதல் திருமதி எதிராசம்மாள் அவர்கள் நிர்வாகத்தில் நடைபெறலாயிற்று.

அப்போது, நமது நிர்வாகி அவர்கள், தமது தமக்கையாரான திருமதி எதிராசம்மாள் அவர்களின் நிர்வாகத்தில் 1917-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் உதவி ஆசிரியராகப் பணியேற்று 1923-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி இராணிப் பேட்டை அரசினர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் பயின்று லோயர் கிரேடு தேர்ச்சிபெற்று, மீண்டும் ஹை பள்ளியில் 1926-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13-ஆம் தேதிவரை பணியாற்றினார். 1926-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் தேதி முதல் பள்ளித் தலைமை ஆசிரியராகிப்பின், பள்ளி நிர்வாகத்தையும் ஏற்றார்.

1932-ஆம் ஆண்டு, வேலூர் தொன்பாஸ்கோ இரவுப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்து பயின்று ஹை யாண்டு நவம்பர் மாதம் ஹையர் கிரேடு தகுதிபெற்று நாளதுவரை பள்ளி ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார். 1933-ஆம் ஆண்டிலிருந்து உயர்தர ஆரம்பப் பள்ளியாக மாற்றப்பட்டு அன்றுமுதல் இன்றுவரை திறம்பட இயங்கி வருகிறது.

இவர், ஆசிரிய நிர்வாகியாகப் பதவியேற்ற 1926-ஆம் ஆண்டில் 2-ஆசிரியர்களும் 62-மாணவ மாணவிகளுமிருந்தனர். இன்று 33-ஆசிரிய ஆசிரியைகளும் சுமார் 950 மாணவ மாணவிகளும் உள்ளனர்.

பொதுத் தொண்டு

நமது பெருமதிப்பிற்குரிய நிர்வாகியவர்கள் 1926-ஆம் ஆண்டு முதல் நாளது வரையில் சாரண ஆசிரியராகப் பணி புரிந்து வருகிறார். 1926-ஆம் ஆண்டு நீலகிரியில் கனம் மேன்மை தங்கிய வைஸ்ராய் இர்வின் பிரபு அவர்கள் தலைமையிலும், சென்னை மாகாண கவர்னர் கனம் கோஷன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற ஜம்பூரியில் (Jamboree) கலந்துகொண்டு, சாரண மாகாண கமிஷனர் பெருந்திரு சர். சி. பி இராமசாமி ஐயரவர்களிடத்தில் நற்சான்றிதழ் பெற்றுள்ளார். சாரண சங்கத்தின் உயர் போதனைக்காக 1930-ஆம் ஆண்டு சென்னையில் தனக்கால (Thanakala) என்ற இடத்தில் நடைபெற்ற உட்பேட்ஜ் (Woo Badge) கோர்ஸில் சேர்ந்து நற்சான்றிதழ் பெற்றுள்ளார்.

இனி, இவர் சுமார் 12-ஆண்டுகள் வடார்க்காடு மாவட்டச் சாரணசங்கத்தின் கௌரவப் பொருளாளராகவும், செயலாளராகவும், தொண்டாற்றியுள்ளார். 1934-ஆம் ஆண்டு வடார்க்காடு மாவட்டத்து ஆசிரிய நிர்வாகிகள் சங்கம் ஏற்பட்டது. இவர் செயலாளராக இருந்து செயலாற்றினார். 1935-ஆம் ஆண்டு முதல் 7-ஆண்டுகள் மாவட்டக் கல்விக்குழுவின் அங்கத்தினராகவும் பணியாற்றி இருக்கிறார். 19-11-1935-ல் சென்னை மாநில உதவிபெறும் உயர்துவக்கப்பள்ளி ஆசிரிய நிர்வாகிகளின் சங்க மாநாட்டு வரவேற்புக்குழுவின் தலைவராக இருந்து சிறப்புற நடத்திவைத்தார்.

தெய்வத் திருப்பணிகள்

“தெய்வந்தெளிமின்; தெளிந்தோர்ப்பேணுமின்” என்று சேர நாட்டிளவல் இளங்கோவடிகள் சிலப்பதிகார நூலில் கூறிய தற்கிணங்க, எம் அரும்பெரும் நிர்வாகியவர்களும் தெய்வந் தெளிந்து; தெளிந்தோரைப் போற்றிப்பேணி வருகின்றார். இவர் பாற்கடற் கொண்டோனாகிய நீணிலத்திருமால் அடியாராவர்.

இனி, இவர் திருப்பதி, காஞ்சிபுரம், திருவரங்கம் மற்றுமுள்ள வைணவத் திருப்பதிகளுக்குச் சென்று ஆங்காங்கு நிகழும் உற்சவ நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஏழைகட்கு உணவளித்து வருகின்றார். காஞ்சி கருடசேவை, திருவரங்கத்தில் ஆருத்ரா தரிசனம் இன்னோரன்ன விழாக்கள் முக்கிய மானதாகும்.

ஞாயிற்றுக்கிழமை யன்று இவர் மௌன விரதமேற்று கம்பராமாயணத்தை மௌனமாகவே தனிமையிடத்தில் படித்து வருகிறார்.

நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் போன்ற நூல்களையும் இவர் போற்றிப் படித்துவரும் திறம் மகிழ்தற்குரியதும் பாராட்டப்பட வேண்டியது மாகும்.

அன்பளிப்புகள்

இனி, இவர் கொடைத்திறம் போற்றற் பாலதேயாமெனக. பள்ளி மாணவ, மாணவியர்கட்கு நூல்களாகவும் பள்ளிக் கட்டண மாகவும், நண்பகலுணவிற்காகக் குழந்தைகளுக்கு உதவியும் வருகிறார். பள்ளி ஆண்டு விழாவின்போது பள்ளி ஆசிரிய ஆசிரியை கட்கு ஏதாவது அன்பளிப்புகள் வழங்கி வருகின்றார்.

அறுபதாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பள்ளி ஆசிரியர் களுக்குச் "சீருடை"க்காகச் சுமார் ரூ. 2100-செலவிட்டு இருக்கிறார்.

இவ்வாறு, பலவித தொண்டுகளை இயற்றிவரும் ஆசிரிய—நிர் வாகி திருமிகு. எஸ். இராமானுஜய்யா அவர்கள் இன்னும்பல் லாண்டு வாழ விரும்புகிறோம்; விழைகிறோம்.

(44-ம் பக்கத் தொடர்ச்சி)

கித் தனித்து இருந்தது. சமீப காலம் வரை பூடானுக்கு எந்த அந்நியரும் வந்ததில்லை. பூடானுக்கு வளம் பொருந்திய கலாசாரப் பாரம்பரியம் உண்டு என்றும், வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் ஆத்மீக உணர்ச்சி படர்ந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

பூடான் மக்கள் தங்கள் பாரம்பரை வாழ்க்கை முறையிலேயே பெரிதும் ஒட்டிக்கொண்டிருப்பதால், 1961-ம் ஆண்டு செயல் படுத்தப் பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் அபிவிருத்தி வேலைகளில் அவர்கள் அவ்வளவு உற்சாகம் காட்டவில்லை.

திட்டச் செலவு முழுவதும் இந்தியா வழங்கியது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்துக்கான மொத்தச் செலவு ரூ. 18 கோடியை இந்திய அரசாங்கம் மானியமாக வழங்கியது. சாலைகள் போடுவது, மடாலயப் பள்ளிகளுடன் கூட மேல்நாட்டுப் பாணிப் பள்ளிகளையும் அமைப்பது, குடிசைத் தொழில்களை நிறுவுவது ஆகியவற்றுக்குத் திட்டத்தில் முக்கியத்துவம் தரப் பட்டுள்ளது.

இந்திய நிலை உட்கூறுத்துறையினர் அண்மையில் பூடானில் டாலமைட் கண்டு பிடித்துள்ளனர். உலகில் உள்ள உருக்காலைகள் பல நூற்றாண்டுகளுக்குப் பயன் படுத்தப் போதுமான டாலமைட் பூடானில் உள்ளது.

வடசென்னை கல்வித்தந்தை
உயர் திரு. சந்தனகுமார பாண்டியர் அவர்களின்
வாழ்க்கைக் குறிப்பு

வடசென்னை கல்வித்தந்தை என்று சென்னை மாநகர் மக்களால் பெருமையுடன் அழைக்கப்பட்டு வரும் உயர்திரு. சந்தனகுமார பாண்டியர் அவர்கள், நெல்லை மாவட்டத்தில் உள்ள ஆலடிப்பட்டி என்ற கிராமத்தில், 1890–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2–ஆம் நாளன்று பிறந்தார். இப்பெரியாரின் தந்தையின் பெயர் சண்முக நாடார். தாயார் பெயர் தனலட்சுமி அம்மாள். இவர்கள் இருவரும் நமது பாண்டியர் அவர்களுடன் 1894–ஆம் ஆண்டு சென்னையில் குடியேறினர்.

அக்காலத்தில், ஏழை மாணவர்கள் கற்பதற்குச் சென்னையில் போதிய பள்ளி வசதி இல்லாதிருந்தமையால், சந்தனகுமார பாண்டியரைச் சிறந்த முறையில் படிக்க வைப்பதற்குப் பெற்றோர்களால் இயலவில்லை. உரிய அளவு பள்ளிகள் இல்லாமையால், ஏழை–எளியவர்கள் கல்வி பெறாது இருண்டவாழ்வு நடத்துவதைத் தாம் வாலிபர் ஆனதும் உணர்ந்த பாண்டியர், 1913–ஆம் ஆண்டு தமது அன்னையின் பெயரால், வண்ணையம்பதியில் ஒரு ஆரம்பப் பள்ளியை நிறுவினர். அப்பொழுது பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள் 92 பேர்.

பள்ளியின் பெருமை உயரவே, பல்வேறு பகுதிகளிலிருந்தும் இப்பள்ளிக்கு மாணவர்கள் படிக்க வந்தார்கள். இட வசதி இன்மையால் அநேக மாணவர்களைச் சேர்க்க முடியவில்லை. இந்தக் குறையை நீக்க 1926–ஆம் ஆண்டு இரண்டுமாடிக் கட்டிடம் ஒன்று பாண்டியர் கட்டினார். பள்ளியின் வளர்ச்சியில் அக்கறையும், மாணவர்கள் கல்வியின் தரத்தை உயர்த்துவதிலும் பெருமுயற்சி எடுத்துப் பாண்டியனார் பணியாற்றியதால், பள்ளியின் புகழ் மேலும்மேலும் உயர்ந்தது. இதனால் இட நெருக்கடியும் அதிகரித்தது. இதனைப் போக்க 1941-ஆம் ஆண்டு மேலுமோர் இரண்டு மாடிக் கட்டிடம் கட்டினார் தற்பொழுது பள்ளியில் 1096 மாணவர்கள் படித்து வருகிறார்கள். 33 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள்.

பள்ளியின் முன்னேற்றத்திற்காக இவர் கட்டிய இரண்டு இரட்டை மாடிக் கட்டிடங்களுக்கும் யாரிடமும் நன்கொடையோ மற்ற உதவியோ பெறவில்லை. அரசாங்கத்திடமும் மானியம் கேட்கவில்லை. தமது சொந்தப் பணத்திலேயே இவைகளைக் கட்டினார் என்பது இவரது அரிய தொண்டுள்ளத்திற்கு எடுத்துக்

காட்டாகும். படங்கள், துணைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் மூலம் ஆசிரியர்கள் பாடங்கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்துவார். ஒவ்வொரு வாரமும் ஆசிரியர்களின் பாடக் குறிப்பேட்டைப் பார்த்து, அதன்படிப் பாடம் நடைபெறும் வகையில் கண்காணிப்பது இவர் வழக்கம்.

1930-ஆம் ஆண்டு இவரது துணைவியார் திருமதி அனந்தம்மாள் மறைந்ததும் அதனை அடுத்து, இவரது ஒரே மகன் திரு. சம்பந்தம் அவர்கள் 1945-ஆம் ஆண்டு இயற்கை எய்தியதும் இவர் வாழ்வில் ஏற்பட்ட பெருந்துன்பங்களாகும்.

மகனின் பிரிவிற்குப்பின் பெரும் சோகத்தில் ஆழ்ந்த பாண்டியர், தமது மகனின் ஒரே மகள் கமலா என்பவரை வளர்ப்பதிலும், தனது மகனின் குடும்பத்தைப் பேணுவதிலும் அக்கறைகாட்டித் தமது பிரிவாற்றாமையைத் தணித்து வருகிறார். இவரது பேத்தி கமலாவை திரு. ஆலடி அருணா, பி. ஏ., பி. எல். என்பவர் மணமுடித்திருக்கிறார்.

திரு. சந்தனகுமார பாண்டியர் அவர்கள் எந்த அரசியல் இயக்கத்திலும் ஈடுபடாதவர். கல்வியை வளர்க்க வேண்டும் என்ற ஒரே பணியை மிகவும் சிறப்பாகச் செய்து வருபவர்.

இவருக்கு ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகள் பேசவும், எழுதவும் தெரியும்.

குதிரைமீதிருந்து திருமணம்

நியூயார்க், ஆக. 3—

அமெரிக்காவின் நியூஜெர்சி மாநிலத்திலுள்ள யூனியன் என்னும் ஊரில் அண்மையில் புதுமையான திருமணம் ஒன்று நடைபெற்றது. மணமகனான எர்னஸ்ட் கிளீனும் மணமகள் நர்தியா கார்ப்பெண்டரும் குதிரை மீது இருந்தவாறே மணம் புரிந்து கொண்டனர். மணமகனின் தோழர்கள் மற்றும் மணப் பெண்ணின் தோழிகள் ஆகிய 20 பேர் குதிரை மீதே திருமணம் நடைபெறும்போது இருந்தனர்.

மணமகன் "கௌபாய்" எனப்படும் மாடு மேய்ப்பவர். மணமகளும், மணமகனும் மாடு மேய்ப்போர் அணியும் ஆடைகளையே மண உடையாக அணிந்திருந்தனர்.

இத்திருமணத்தை நடத்திவைத்த பாதிரியார் ஹெர்பர்ட் கூப்பர் மட்டும் தன்னந்தனியாகத் தரையில் நின்று தன் கடமையைச் செய்தார்.

கல்வித்துறைச் செய்திகள்

நம்நாட்டில் 24 சதவிகிதம் பேர் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

—

1961 மக்கள்தொகைக் கணக்கில் தகவல்.

புதுடில்லி, ஆக. 22–1961–ம் வருட மக்கள் தொகை கணிப்பின்படி, இந்நாட்டில் 24·02 சதவிகிதம் பேர் கல்வியறிவு பெற்றுள்ளனர். அவர்களில் ஆண்களின் விகிதாசாரம் 34·44 சதவிகிதம்; பெண்களின் விகிதாசாரம் 12 95 சதவிகிதம். இத்தகவலை யூனியன் கல்வி மந்திரி, டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி நேற்று மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

படித்தவர்களின் விகிதாசாரத்தைப் பெருக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுகையில், இலவச, கட்டாயக்கல்வி அளிப்பதற்கான சட்ட திட்டங்கள் அனேக ராஜ்யங்களில் அமுல் நடத்தப்பட்டிருக்கின்றன என்றும் மற்ற ராஜ்யங்களும் இத்தகைய சட்டங்களைக் கூடிய சீக்கிரம் இயற்றும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன என்றும் டாக்டர் ஸ்ரீமாலி கூறினர்.

அதிகப்படி ஆசிரியர்களை நியமிப்பது, ஆசிரியர் பயிற்சி வசதிகளை உயர்த்துவது, பெண் கல்வி சம்பந்தமான விசேஷத் திட்டங்கள், ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவது ஆகிய காரியங்களுக்காக, மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கு உதவி அளித்து வருகின்றனர் என்றும் அவர் கூறினர்.

ஆசிரியர்கள் சம்பள உயர்வுக்கு மத்திய அரசு உதவி.

—

செலவில் பாதியை மாநிலங்கள் பெறலாம்:

கல்வி அமைச்சர் ஸ்ரீமாலி விளக்கம்.

புதுடில்லி, ஆக 28—ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த ஏற்படும் அதிகப்படி செலவில் பாதியை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறலாம் என்று மாநிலங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி இன்று மக்கள் சபையில் கேள்வி நேரத்தின்போது கூறினர்.

ஆனால், மத்திய அரசாங்கம் தரும் நிதிஉதவி எதுவும் 5 ஆண்டுத்திட்டக் கல்வி நிதி ஒதுக்கீடுகளுக்கு உட்பட்டதாகவே இருக்க முடியும் என்றும் அவர் சொன்னர்.

எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து ஆசிரியர் பயிற்சிபெற்ற அனைவரும், நாடு முழுவதிலும் மாதம் ரூ. 100–க்குக் குறையாத

சம்பளத்தை இப்போது பெற்று வருவதாகத் தெரிவித்த டாக்டர் ஸ்ரீமாலி, "இது ஒரு திருப்தியான சம்பளம் அல்லதான். ஆசிரியர்கள் நிலைமை உயர்த்த, அரசாங்கம் தொடர்ந்து முயற்சிக்கும்" என்றும் கூறினார்.

பள்ளிகளிடையே நெருங்கிய தொடர்பு

—

கல்வி இயக்குநரின் திட்டம்

திருச்சி, செப். 11—1964—லிருந்து ஈ. எஸ். எல். சி. பரீட்சையை ஒழிப்பது என்று சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் சேருவதற்கு என்று பரீட்சைகள் எழுத வேண்டியதில்லை. அவர்களுடைய உயர்தர எலிமெண்டரி சீனியர் ஆதாரப் பள்ளிக்கூட மார்க்ஷீட்டுகளைப் பார்த்து அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று கல்வி இலாகா டைரக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு திருச்சி ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்கள் தலைமையாசிரியர்களின் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இது தலைமையாசிரியர்களிடம் சர்க்கார் வைத்துள்ள நம்பிக்கையையே காட்டுகிறது என்றார். ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஹைஸ்கூல்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்வதற்கான புதிய திட்டமொன்றைக் கொண்டுவரலாம் என்று அவர் யோசனை தெரிவித்தார்.

இந்தப் புதிய திட்டப்படி ஒவ்வொரு ஹைஸ்கூலின் தலைமையாசிரியரும், அந்த ஹைஸ்கூல் பகுதியிலிருக்கும் இரண்டு அல்லது மூன்று ஹையர் எலிமெண்டரி பள்ளிகள் அல்லது சீனியர் ஆதாரப் பள்ளிக்கூடங்களுக்கு "வளர்ப்புத் தந்தை" யாக இருக்க முடியும் என்றார் திரு. சுந்தரவடிவேலு. இந்தத் திட்டத்தின்படி ஒவ்வொரு ஹையர் எலிமெண்டரி அல்லது சீனியர் ஆதாரப் பள்ளியின் தலைமையாசிரியரும், பள்ளிக்கூட உதவி இன்ஸ்பெக்டரின் அங்கீகாரத்துடன் ஒவ்வொரு பாடத்துக்கும் மாதாந்திர பாடத் திட்டத்தைத் தயாரித்து, அப்பகுதியில் உள்ள ஹைஸ்கூலின் தலைமையாசிரியரிடம் காட்டுவார்.

தொடக்கப் பள்ளிகளின் வளர்ச்சி பற்றிக்

கல்வி இயக்குநர் சுந்தரவடிவேலு

திருச்சி, செப். 10—இன்று காலை தேவர் ஹாலில் எழு ஆதாரப் பள்ளிகளின் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாநாடு நடைபெற்றது 2000 குழந்தைகளுக்குச் சீருடையும் வழங்கப்பட்டது.

சீருடைகளை வழங்கி விட்டுக் கல்வி டைரக்டர் திரு. சுந்தரவடிவேலு பேசுகையில் ஆசிரியர்கள் நன்றாக உடுத்துக் கொள்வது அவசியமென்றும் கல்வி அபிவிருத்தியில் குருபக்தி முக்கிய அம்சம் என்றும் கூறினார். ஆசிரியர்கள் வகுப்பறைகளுக்கு உள்ளும் புறமும் "கச்சடா" பேச்

சைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

நல்ல ஆசிரியர் என்று ஒருவரைப்பற்றி முடிவு கட்டும் பொழுது பரீட்சையில் தேறிய மாணவனின் எண்ணிக்கையைக் கொண்டு அப்படிச் சொல்வதில்லை என்றும், அவரிடம் தயாரான மாணவர்களின்குணத்தைக் கொண்டுதான் முடிவு கட்ட வேண்டுமென்றும் கூறினார்.

கல்வி வளர்ச்சி பற்றி அவர் பிரஸ்தாபிக்கையில் 1947-ல் 11,000 ஆரம்பப் பள்ளிகள் இருந்ததாகவும், 10 இலட்சம் பிள்ளைகள் படித்ததாகவும், இப்பொழுது 23,000 ஆரம்பப் பள்ளிகளாகி விட்டதாகவும், 47 இலட்சம் பிள்ளைகள் படிப்பதாகவும் அவர் கூறினார். முன்பு ஒரு இலட்சம் பேர் உயர்நிலைப்பள்ளியில் படித்ததாகவும் இப்பொழுது 10 இலட்சம் பேர்படிப்பதாகவும் அதில் எட்டரை இலட்சம் பேருக்கு இலவசக்கல்வி என்றும் அவர் கூறினார்.

ஆசிரியர்கள் மிஷனரி பள்ளிகளின் ஊக்கத்துடன் வேலை செய்ய வேண்டுமென்று தெரிவித்தார். பூஜ்யர் இராயப்பர் நன்றி கூறினார்.

எளிய தமிழ்ப்பாட புத்தகங்கள்: திருச்சி ஆசிரியர்கள் கோரிக்கை

— —

ஆசிரியர்–மாணவர் விகிதம் குறித்துத் தலைவர் வற்புறுத்தல்

திருச்சி, செப். 16—முதல் ஸ்டாண்டர்டு முதல் 8–வது ஸ்டாண்டர்டு வரை எளிய தமிழ் பாட புத்தகங்களை வைக்கும்படி திருச்சி ஜில்லா ஆசிரியர்கள் கில்டு, சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த ஸ்டாண்டர்டுகளில் படிக்கும் மாணவர்களின் வயதையும், கிரஹிக்கும் சக்தியையும், வைத்துப் பார்த்தால் தற்போதுள்ள தமிழ்ப்பாடப்புத்தகங்கள் கஷ்டமானவை என்று நேற்று மாலை கில்டு கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. ஆர். பூவராகன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஆரம்ப, உயர்தர துவக்கப் பள்ளித்தலைமையாசிரியர்களுக்கு 'ட்யூடி' அலவன்ஸ் தர வேண்டுமென்று மற்றொரு தீர்மானம் கேட்டு கொண்டது.

6–வது முதல் 8–வது ஸ்டாண்டர்டு வரை 5 செக்ஷன்களுக்குக் குறைவாயுள்ள ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்தர துவக்கப் பள்ளிகளிலும் உள்ள கைத்தொழில் ஆசிரியர்களைப் பகுதி நேர ஆசிரியர்களாகக் கருதும்படி சர்க்கார் சமீபத்தில் பிறப்பித்த உத்தரவு குறித்து கில்டு வருத்தம் தெரிவித்தது. இவர்களை முழு நேர ஆசிரியாகளாகச் செய்வதோடு, 4-வது ஸ்டாண்டர்டில் உள்ள கைத்தொழில் ஆசிரியர்களுக்கும் அதே அனுகூலங்கள் கிடைக்கச் செய்யவேண்டுமென்றும் கோரியது.

ஆரம்பப் பள்ளிகளுக்கும் உயர் துவக்கப்பள்ளிகளுக்கும் தரப் படும் பராமரிப்பு மான்யத்தை 10 சதவிகிதத்திலிருந்து 20 சத விகிதமாக உயர்த்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டது.

ஆசிரியர்-மாணவர் விகிதம்

கில்டு தலைவர் திரு. ஆர். பூவ ராகன் பேசுகையில் கூறியதா வது :—

ஆசிரியர் — மாணவர் விகிதம் பற்றிய புதிய உத்தரவு நிலைமை ஓரளவு லகுவாக்கியுள்ளது. ஆனால் மாணவர்களிடம் தனிப் பட்ட கவனம் செலுத்த வேண்டு மென்றால் கீழ் வகுப்புகளில் ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர் களுக்கு மேல் கூடாது என்ற ஆசிரியர்கள் ஸ்தாபனங்களின் கருத்துக்கு ஏற்ப அது இல்லை.

ஆரம்பப் பள்ளிகளில் சராசரி 40 மாணவர்கள் ஆஜராகியிருக்க வேண்டும் என்பது அனுகூலங் களைக் குறைத்து விடுகிறது. பட் டியலில் 50 பேருக்கு மேல் இருந் தால்தான் 40 பேருக்கு மேல் ஆஜர் இருக்க முடியும்.

இதன்படி ஒவ்வொரு பள்ளி ஆசிரியரும் 50 குழந்தைகளுக்கு மேற்பட்ட வகுப்பை நடத்த வேண்டி யிருக்கிறது. எனவே, தரத்தைக் கருதி வகுப்புக்கு 40 மாணவர்களாக வைக்கவேண்டும். அதிக பட்சம் 40 ஆகவும் சராசரி ஆஜரை 30 ஆகவும் வைக்கலாம். மெம்பர்கள் இந்தப் பிரச்சினை குறித்துச் சிந்திக்க வேண்டும்" என்று திரு பூவராகன் கேட்டுக் கொண்டார்.

அதன்பேரில் ஆசிரியர்—மாண வர் பிரச்னையை அடுத்த கூட்டத் தில் வைத்துக்கொள்வது என்று கில்டு தீர்மானித்தது.

மூன்றும் வகுப்பிலிருந்து ஆங்கில போதனை அமல்

செகண்டரி கிரேட் ஆசிரியர் கள் நியமிக்க அனுமதி

சென்னை, செப். 7-மூன்றாவது வகுப்பிலிருந்தே (ஸ்டாண் டர்ட்) ஆங்கிலம் போதிக்க வேண்டும் என்று உத்திரவிடப் பட்டதையடுத்து, மூன்றாவது வகுப்பு வரையுள்ள பள்ளிகளி லெல்லாம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கஅரசாங்கம் அனுமதித்துள்ளது.

நிர்ணய ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் அமைந்திருந் தால், உயர்தர ஆரம்ப கிரேட் ஆசிரியருக்குப் பதிலாகவோ அல் லது அதிகப்படியாகவோ செகண் டரி ஆசிரியரை நியமிக்கலாம்.

செகண்டரி பள்ளிக்கூடங்க ளின் ஆரம்பப் பிரிவில் மேல் வகுப்புகளாக நான்காவது ஸ்டாண்டர்டு, ஐந்தாவது ஸ்டாண்டர்டுகள் இருந்தால், இப்பள்ளிகளில் ஏற்கனவே இருந் துவரும் செகண்டரி கிரேட் ஆசி ரியர்களே மூன்றாவது ஸ்டாண் டர்டில் ஆங்கிலம் போதிக்கலாம்.

இதற்காகும் அதிகப்படிச் செலவுகளை, பஞ்சாயத்து யூனியன் பிரதேசங்களில் பஞ்சாயத்து யூனியனும், அரசாங்கமும் பகிர்ந்து கொள்ளும். பஞ்சாயத்து யூனியன் வசமில்லாத மான்ய உதவிப் பள்ளிக்கூடங்களில் அரசாங்கமே ஏற்கும். முனிசிபல் நிர்வாகத்திலுள்ள பள்ளிகள் சம்பந்தமாக, பற்றுக் குறையை ஈடு செய்வதற்கான நடைமுறை பின்பற்றப்படும்.

பஞ்சாயத்து யூனியன்களில் கல்வி நிலையங்களின் நிலை

அதிகாரி—தலைவர்களுக்கு இடையே ஆசிரியர்கள் படும் பாடு

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி தென்னார்காடு மாவட்டக் குழுவின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:—

"ஆசிரியர்கள் பல பஞ்சாயத்து யூனியன்களில் அடிக்கடி மாறுதலடைந்து தொல்லைகளுக்குள்ளாகின்றார்கள்.

ஆணையர், தலைவர் ஆகியோரின் போட்டாபோட்டி மனப்பான்மையின் காரணத்தாலும், ஒற்றுமையின்மையாலும், ஆசிரியர்களுடைய மதிப்பு, ஆரம்பக் கல்வியின் நிலைமை, ஆசிரியர்களுடைய சம்பளப் பிரச்சினை முதலியவைகள் பாதிக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் மதிப்புக் குறைவாக நடத்தப்படுகிறார்கள். நன்முறையில், பாதிக்கப்பட்ட ஆசிரியரே நேரில் முறையிட்டால் பழிவாங்கும் எண்ணத்தோடு மாறுதல் செய்தல், மிகக் கடுமையான சுற்றறிக்கை விடுத்துப் பயமுறுத்துதல் ஆகியவைகள் மலிந்துவிட்டன.

இவைகளை எல்லாம் நோக்கும்போது, எதிர்காலத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆரம்பக்கல்வியின் நிலை என்னவாகுமென்பதை நினைக்கவே அச்சமாயுள்ளது.

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியிலும் தரத்திலும் முக்கிய கவனம் செலுத்தும் பலருக்கு இது மிகவும் வேதனையூட்டும் நிலையாக உள்ளது.

முக்கியமாக மரக்காணம் பஞ்சாயத்து யூனியனில் பஞ்சாயத்து யூனியன் நிர்வாக இயந்திரக் கோளாறுகளினால் 26 ஆசிரியர்கள் இன்றுவரை தொடர்ந்து வேலை செய்தும்கூட சம்பளம் பெறாமல் இரண்டு மாத காலமாக வேலை செய்து வருகின்றனர். இந்த நிலை, மாவட்ட போர்டு இருந்த காலத்தில்கூட ஏற்பட்டதில்லை.

தென்னார்காடு மாவட்டம் குமராட்சி பஞ்சாயத்து யூனியனில் ஆசிரியர்களை அறிவில்லாதவர்கள் என்று பொருளிட்ட சுற்றறிக்கை ஆணையரால் அனுப்பப்பட்டுள்ளது மிக வேதனையிலும் வேதனை தரத்தக்க செயலாக உள்ளது.

அதைப்போலவே, அண்மையில் வீரப்பாளையம் பஞ்சாயத்து யூனியனில் விடப்பட்டுள்ள ஆணையரின் ஒரு சுற்றறிக்கையும் ஆசிரியர்களைப் பயமுறுத்துவதாகவும், பிரச்சினையே இல்லாமலிருக்கக் கூடியவர்களை வீண் பிரச்சினைகளை உண்டாக்கி ஆசிரியர்களைப் பழிவாங்கக்கூடியதாகவும் உள்ளது.

இவைகளை உடனடியாக அரசாங்கம் கவனித்து, விசாரித்து, உண்மை நிலையை அறிந்து நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம். இது விஷயமாக அரசாங்கத்துக்குக் கூட்டணியின் ஒத்துழைப்பு நிச்சயம் கிடைக்கும்.

மாணவ—ஆசிரிய வீதாச்சாரம்: உடனடி மாறுதல்

—

உபரியாகிறவர்கள் வேலையை இழக்கமாட்டார்கள்

ஆரம்ப வகுப்புகளில் (முதல் வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு முடிய) ஆசிரிய மாணவ வீதாச்சாரத்தை மாற்றி சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதன் விளைவாக உபரியாகின்ற ஆசிரியர்கள் வேலை இழக்க மாட்டார்கள் எதிர்காலத்தில் காலியாகக்கூடிய இடங்களில் அமர்த்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடங்கள் உட்பட எல்லா வகை ஸ்கூல்களுக்கும் இந்த வீதாச்சாரம் பொருந்தும்.

தேகப்பயிற்சிப் போதகர்களும் 3 முதல் 5ம் வகுப்பு வரை ஆங்கிலம் போதிக்கும் செகண்டரி ஆசிரியர்களும் இந்த விதியின் கீழ் வரமாட்டார்கள்.

புதிய விகிதம்

சராசரி 55 மாணவர்கள் வரை ஆஜராகின்ற வகுப்புக்கு ஒரு ஆசிரியர்.

84 வரையுள்ள வகுப்புக்கு ஒரு அதிகப்படி ஆசிரியர்.

124 வரை ஆஜருக்கு 2 அதிகப்படி ஆசிரியர்கள்.

159 வரை ஆஜருக்கு 3 அதிகப்படி ஆசிரியர்கள்.

194 வரை ஆஜருக்கு 4 அதிகப்படி ஆசிரியர்கள்.

225 வரை ஆஜருக்கு 5 அதிகப்படி ஆசிரியர்கள்.

இந்தத் திட்டப்படி ஒன்றுக்கு மேல் ஆசிரியரை வைத்துக் கொள்ள உரிமையுள்ள வகுப்பை இரண்டு அல்லது அதிகப்படி வகுப்புகளாகப் பிரித்துக்கொள்ளலாம். அப்படிப் பிரிக்கப்படும் ஒவ்வொரு வகுப்பும் (ஸ்டாண்டர்டும்) ஒரு தனி உறுப்பாகக் கருதப்பெறும்.

இப்புது உத்தரவு உடனடியாக அமலுக்கு வரும். இந்த உத்தரவின் பயனாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருக்கும் மாணவர்கள் தொகைக்கேற்ப ஆசிரியர்கள் தொகை அதிகப்படுத்த ராஜ்யம் பூராவிலும் வசதி ஏற்படும்.

இதுவரை 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாசாரமே இருந்து வந்தது.

இது எல்லாப்பள்ளிக்கூடங்களுக்கும் பொருந்துவதாயிருந்தது. பொதுவாக ஒவ்வொரு பள்ளியும் ஒரு யூனிட்டாகக் கணக்கிடப் பட்டது. பஞ்சாயத்துக்களில், பஞ்சாயத்து பிரதேசம் பூராவையும் ஒரு யூனிட்டாக வைத்துக் கொண்டு, பள்ளியில் சேர்க்கப் பட்டுள்ள 40 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாசாரம் இருந்து வந்தது.

இதனால் ஆசிரியர்களை அமர்த்துவதில் சங்கடங்களும், புகார்பாடுகளும் எழுந்தன. நிறைய மாணவர்கள் உள்ள பள்ளிகளில் அதிக ஆசிரியர்களை அமர்த்த முடியாமலிருந்தது. ஜனத்தொகை குறைவாகவுள்ள இடங்களில் உபரியாக ஆசிரியர்கள் இருந்தனர். நகரில்கூட சில பள்ளிகளில் நடைமுறையில் எண்பது மாணவருக்கொரு ஆசிரியர் என்ற நிலவரம் காணப் பட்டது.

35 மாணவர்களுக்கு மேல் ஆகும்போது, அதிகப்படி ஆசிரியரை நியமிக்க கல்வி இலாகா அனுமதிப்பதில்லை. 70 மாணவர்கள் சேர்ந்த பிறகே அதிகமாக ஒரு ஆசிரியரை நியமிக்க அனுமதித்து வந்தது. இதன் பயனாக 70 அல்லது 80 மாணவர்களை வைத்துக்கொண்டு ஆசிரியரால் நியாயமாகப் போதிக்க முடியவில்லை. ஆசிரியர் எவராவது ராஜா எடுத்துக்கொண்டால் 150க்கு மேற்பட்ட மாணவர்களைக் "கட்டி மேய்க்கவேண்டிய நிலைமை" ஏற்பட்டு விடுகிறதுண்டு.

புது உத்தரவு அமுல் மூலம் இந்தொந்தரவுகள் எல்லாம் உடனடியாக நீங்கிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

புது உத்தரவின்கீழ் முந்தின ஆண்டின் சராசரி மாணவர் ஆஜர் கணக்கை வைத்துக் கொண்டு புது ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்டு முதல் வாரத்தில் ஒவ்வொரு பள்ளியிலும், வகுப்புகள் வாரியாக விகிதாசாரம் பரிசீலிக்கப்படும். மாணவ ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதால், முதலில் பள்ளியில் சேரும் மாணவர்கள் வருஷம் பூராவும் வகுப்படி கவனித்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர் தொகை வீணாகாமல் இருப்பதற்கு இது முக்கியமாகும்.

பள்ளிவாரியாகக் கணக்கெடுத்துப் பல்வேறு பள்ளிகளிலுள்ள உபரி — ஆசிரியர்கள் தொகை கணிக்கப்படும். இவ்விதம் உபரியாக உள்ள ஆசிரியர்கள் அவர்கள் உள்ள பஞ்சாயத்து யூனியனில் பள்ளிக்கூடங்களிலுள்ள காலி ஸ்தானங்களுக்கு அனுப்பப்படுவார்கள். ஒருபஞ்சாயத்து யூனியனில்உபரியாக ஆசிரியர்கள் இருந்தால், அவர்கள் அந்த ஜில்லாவிலுள்ள மற்ற பஞ்சாயத்து யூனியன்களில் பயன்படுத்தப்படுவார்கள்.

கல்வி டைரக்டரே இதை அவ்வப்போது பரிசீலிப்பார்.

குரு காணிக்கை

[டாக்டர் டி. எஸ். சௌந்தரம் ராமச்சந்திரன்]

[இக்கட்டுரையில், நாம் நமது ஆசிரியர்களுக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டுள்ளோம் என்பதைத் துணைக் கல்வி அமைச்சர் திருமதி. சௌந்தரம் ராமச்சந்திரன் விளக்கியிருக்கிறார். ஆசிரியர் நல்வாழ்வு நிதிக்கும் ஏராளமாக நன்கொடை வழங்கி ஆதரிக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.]

குரு, அல்லது ஆசிரியர், இந்தியாவில் உலக நாடுகளிலெல்லாம் தொன்றுதொட்டே பெரிதும் மதிக்கப்பட்டு வருகிறார். மலிவான புத்தகங்களும், அச்சுக்கூடங்களும் தோன்றுவதற்கு முன் ஆசிரியர்களே நாட்டின் அறிவுக்களமாகத் திகழ்ந்து வந்தனர். குரு சீடன் அல்லது ஆசிரியர் மாணவன் உறவு அன்னியோன்னியமாகவும் உயரியதாகவும் இருந்து வந்தது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற பழமொழி ஆண்டவனை விட ஆசிரியருக்கே முதலிடமிருந்தது என்பதை விளக்குகிறது. ஆசிரியர்கள் சீடர்களின் கல்வியறிவைப் பெருக்கி ஒப்பற்ற ஒழுக்க சீலர்களாக வளர்த்தனர்; ஆத்மீக விஷயங்களிலும் லௌகிகத் துறையிலும் அறிவைப் பெருக்கினர். அதுமட்டுமல்ல மன்னருக்கும் அறிவுரை கூறி, நாட்டுக்கே வழிகாட்டியாக இருந்தனர். மன்னரவையின் மதி மந்திரியாக இருந்தனர்.

பழைய "குரு—சீடர்" முறைகள் இன்று மாறிவிட்டன; இன்றைய ஆசிரிய—மாணவ உறவைப் பழைய அளவுகோலைக்கொண்டு அளவிட முடியாது. எல்லாருக்கும் கல்வியென்ற கொள்கையும், ஜனநாயக நாட்டில் கல்வியறிவு பெறுவது ஒவ்வொரு பிரஜையுடையவும் பிறப்புரிமை என்ற கோட்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். மனித வரலாற்றில் இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. அதன் காரணமாக மாணவர்களின் எண்ணிக்கையும், ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்து விட்டன. ஆகவே ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையேயான அன்னியோன்னிய உறவு குறைந்து வருகிறது; ஆசிரியருக்கு மாணவர் மீதுள்ள பற்றும், பாசமும் மாணவருக்கு ஆசிரியர்பாலுள்ள மதிப்பும் மாண்பும் குறைந்து வருகின்றன. கல்வித் திட்டம் விஸ்தரிக்கப்படுவதால் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையேயான நெருக்கமான நல்லுறவும்

அபிமானமும் குறையவேண்டு மென்பது இல்லை. ஜனநாயக அமைப்பின் காரணமாகவும், கல்வி வளர்ச்சியின் விளைவாக வும் பலபல நன்மைகள் ஏற்பட வேண்டும். மாணவர் எண்ணிக்கை உயர்ந்துள்ளபோதிலும் ஆசிரியர் மாணவருக்கிடையே நெருங்கிய நட்புறவை மீண்டும் மலரச்செய்து பழைய பிணைப்பை ஏற்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

ஒழுக்கத்தை வளர்க்க வேண்டும்

பொதுமக்கள் இந்த அம்சத்தை பெரிதும் உணர்ந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது; ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையே முன்பு நிலவிவந்த பற்றும் பாசமும் மதிப்பும் மரியாதையும் மீண்டும் உயிர்பெற்றெழுந்தால் ஒழிய, மாணவர்களின் கல்வியறிவையும் ஒழுக்க மேம்பாட்டையும் வளர்க்க முடியாது என்பதையும் மக்கள் உணர்ந்து விட்டனர். பெற்றோர்களும், ஆசிரியர்களைப் பெருந்தன்மையாக நடத்தி அவர்களுக்குரிய மரியாதையைத் தரவேண்டும். சமூகத்திலும் ஆசிரியர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அதே போல, ஆசிரியர்களும் அத்தொழிலில் பக்தி சிரத்தையுடன் ஈடுபடுவதோடு மாணவர்களின் நலன்களிலும் நாட்டமுடன் ஈடுபடவேண்டும். அப்போதுதான் மாணவர்களின் மரியாதையையும் அன்பையும் பெற முடியும். பெற்றோர்களும், சமூகமும் ஆசிரியர்களுக்குக் கடமைப்பட்டவர்களாவார்கள். இந்த பரஸ்பர பொறுப்புகளை சமூகமும் ஆசிரியர்களும் உணர்ந்து பாராட்டி வருவது வரவேற்கத்தக்கதாகும்.

சமூகத்தில் ஆசிரியர்களின் அந்தஸ்து உயரவேண்டுமெனின், ஆசிரியர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும். அறிஞர்கள் எல்லாம் ஏழைகளே என்ற முதுமொழியை நினைத்துக்கொண்டு ஆசிரியர்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடாமல் இருந்து விடக் கூடாது. முன் காலத்தில், ஆசிரியர்களின் பிரச்னைகள் அனைத்தையும், சமூகமே கவனித்து வந்தது. ஆசிரியர்களின் நல்வாழ்வைப் பெற்றோர்கள் தமது புனித கடமையாகக் கருதவேண்டும். சம்பளத்தை உயர்த்திவிட்டால் மட்டும் ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்ந்து விடாது. பெற்றோர்கள் ஆசிரியர்களுக்குரிய அன்பையும், மரியாதையையும் செலுத்த வேண்டும்; ஆசிரியர்களும் தங்களுடைய கடமைகளைப் பெரிதாகப்போற்றி மாணவர்களின் நலனில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

நமது ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனும், உபராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் உஸேனும் புகழ்வாய்ந்த ஆசிரியர்களாவர். சமூகம் தமக்கு மதிப்பையும், மரியாதையையும் தருகிறது என்பதை ஒவ்வொரு

(43-ம் பக்கம் பார்க்க)

எமது
வெளியீடுகள்

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
(‘ஆரம்பக் கல்வி’ நிலையம்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

தபால் பெட்டி எண் 1818. டெலிபோன் எண் 24544.

ஆரம்பப் பள்ளிகளுக்கு……

● முதல், இரண்டாம் வகுப்புகளுக்கு அரசியலார் வெளியிடுகின்றனர்.

திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :
பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றும் வகுப்பு	0	8	0	3	28–5–’58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13–5–’59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	11	18–5–’60
ஆறும் வகுப்பு	1	4	0	25	10–5–’61

★

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :
இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

மூன்றும் வகுப்பு	0	8	0	5	28–5–’58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13–5–’59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	13	18–5–’60

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்
ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்.

ஆறும் வகுப்பு	0	12	0	4	16–5–’62

சிறுவர் கணக்கு நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

ஆசிரியர்: பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0 8 0	...	...
மூன்றும் வகுப்பு	0 12 0	43	13–5–'59
நான்காம் வகுப்பு	0 14 0	25	13–5–'59
ஐந்தாம் வகுப்பு	1 4 0	39	15–5–'60

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B. A., L. T.

ஆறும் வகுப்பு	1 8 0	25	10–5–'61
ஏழாம் வகுப்பு	1 12 0	13	16-5-'62

சிறுவர் சமூக நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

இரண்டாம் வகுப்பு	0 10 0	...	...
மூன்றும் வகுப்பு	0 12 0	...	...

ஆசிரியர்: த. சே. உமாபதி M. A., L. T.

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை	1 14 0	44	13–5–'59
செங்கற்பட்டு	1 14 0	44	13–5–'59
வட ஆற்காடு	1 14 0	44	13–5–'59
தென் ஆற்காடு	1 14 0	44	13–5–'59
சேலம்	1 14 0	44	13–5–'59
கோயம்புத்தூர்	1 14 0	44	13–5–'59
நீலகிரி	1 14 0	46	13–5–'59
திருச்சிராப்பள்ளி	1 14 0	46	13–5–'59
தஞ்சாவூர்	1 14 0	46	13–5–'59
மதுரை	1 14 0	22	16–5–'62
இராமநாதபுரம்	1 14 0	22	16–5–'62
திருநெல்வேலி	1 14 0	22	16–5–'62
கன்னியாகுமரி	1 14 0	22	16–5–'62
ஐந்தாம் வகுப்பு	1 12 0	43	18–5–'60

சமூக நூல்

ஆசிரியர்: துரை பழனிவேல், B.A., B.T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	1	12	0	14	10–5–'61

ஆசிரியர்: து. சே. உமாபதி, M.A., L.T.

ஏழாம் வகுப்பு	2	0	0	18	16–5–'62

★

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர்: பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0	6	0	...	...
மூன்றும் வகுப்பு	0	7	0	...	...

ஆசிரியர்: M. விவேகானந்தா, B.Sc., L.T., M.ED.

நான்காம் வகுப்பு	0	10	0	30	13–5–'59

★

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

ஐந்தாம் வகுப்பு	1	4	0	26	18–5–'60

★

பொது விஞ்ஞானம்

ஆசிரியர்: K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

ஆறும் வகுப்பு	1	8	0	30	10–5–'61

★

துணைப்பாடப் புத்தகங்கள்

சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர்: புலவர் சொ. முருகேசனார்

ஐந்தாம் வகுப்பு	0	8	0	15	18–5–'60

நீதிக் கதைகள்

ஆசிரியர்: வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

ஐந்தாம் வகுப்பு	0 8 0	17	18–5–'60

★

அறிவுச் சுடர்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

ஆறும் வகுப்பு	0 10 0	10	10–5–'61

MOTHER INDIA SUPPLEMENTARY READER

(By Mrs. Lucy Arulraj)

VI STANDARD	0 8 0	13	10–5–'61

FOR HIGH SCHOOLS

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

	விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	1·25	25	10–5–'61
எட்டாம் வகுப்பு	1·75	21	13–5–'59

★

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B.A.,L.T.,

ஆறும் வகுப்பு	1·50	28	10–5–'61
ஏழாம் வகுப்பு	1·75	13	16–5–'62

சமூக நூல்

ஆசிரியர்: துரை பழனிவேல், M.A.,L.T.

ஆறும் வகுப்பு	1·75	14	10–5–'61

சமூக நூல்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5-'62
எட்டாம் வகுப்பு	2·50	35	16-5–'62

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

ஆறும் வகுப்பு	1·50	30	10-5-'61

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

பத்தாம் வகுப்பு	2·50	35	10-5-'61

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஆறும் வகுப்பு	75	4	16-5-'62

மாணவர் இலக்கணம்

எட்டாம் வகுப்பு	0 14 0	4	29-7-'59

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

ஒன்பதாம் வகுப்பு	1 4 0	11	18-5-'60

த. சே. உமாபதி, M.A.,L.T.

பத்தாம் வகுப்பு	1 8 0	31	10-5-'61

ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj.

Mother India Supplementary Reader VI Std.	0 8 0	13	10-5-'61
Mother " " " III Form	0 10 0	24	10-5-'61

TAMIL NON-DETAILED

அறிவுச் சுடர் (ஆறும் வகுப்பு)	0 10 0	10	10-5-'61
நாடும் மக்களும்	1 0 0	17	18-5-'60
தொண்டை நாட்டு மன்னர்	1 0 0	19	18-5-'60
பூம்புகார்	0 14 0	R.C.No. 9	15-3-'61
திரு. வி. க.	0 14 0	23	13-5-'59

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, B.A.,B.T.

கணிதம் கற்பிக்கும் முறை	2·00	2	5-7-'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.

ஆறும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.
எட்டாம் வகுப்பு	1·25 ந. பை.
ஒன்பதாம் வகுப்பு	1·25 ந. பை.
பத்தாம் வகுப்பு	1·50 ந. பை.

FOR ELEMENTARY SCHOOLS

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.

(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை	0·75 ந. பை.
செங்கற்பட்டு	0·75 ந. பை.
வட ஆற்காடு	0·75 ந. பை.
தென் ஆற்காடு	0·75 ந. பை.
சேலம்	0·75 ந. பை.
கோயம்புத்தூர்	0·75 ந. பை.
நீலகிரி	0·75 ந. பை.
திருச்சிராப்பள்ளி	0·75 ந. பை.
தஞ்சாவூர்	0·75 ந. பை.
மதுரை	0·75 ந. பை.
இராமநாதபுரம்	0·75 ந. பை.
திருநெல்வேலி	0·75 ந. பை.
கன்னியாகுமரி	0·75 ந. பை.
ஐந்தாம் வகுப்பு	0·94 ந. பை.
ஆறும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

பாடப் பயிற்சி திறவு கோல்

(Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல் எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு பிரதி எட்டணா (50 ந. பை.) விலையில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்பு வாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனமாக அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "ஆரம்பக் கல்வி ஆபீஸ்",
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

★ *படிப்பதற்கேற்ற எழில்மிகு ஏடுகள் !*

★ *நடிப்பதற்கேற்ற நற்றமிழ் நாடகங்கள் !!*

இதோ

பைந்தமிழ் எழுத்தாளர்

திருவாளர் தாமரைக் கண்ணன் அவர்கள்

தீட்டிய

அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில்
வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள் !

	ரூ.	காசு
1. வெண்ணிலா	1	50

தன் அண்ணனைத் திருத்தியதுடன் நன்கொடை
யென்றால் நாலாறுமைல் தூரம் ஓடும் தந்தைக்கும்

நல்வழிகாட்டியாக இருந்து கல்விக்கூடங்கள் கலைக்கூடங்களாக விளங்கப் பாடுபடும் ஓர் மாணாக்கியைப் பற்றிய நாடகம். கருத்தாழமும் நகைச் சுவையும் நிறைந்த சமுதாயப் படைப்பு!

2. மருது பாண்டியர் 2 00

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டுத் தம் நல்லுயிர் ஈந்து நற்புகழ் எய்திய தமிழ் மறவர் இருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். துள்ளும் நடையும் துடிப்புள்ள வசனங்களும் நெஞ்சத்தை உருக்கும் காட்சிகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க சித்திரம்!

3. அலெக்ஸாண்டர் 1 50

'உலகிலுள்ள காடெல்லாம் நாடாக வேண்டும்; அந்த நாடெல்லாம் நானாள வேண்டும்' என்று மண்ணகமெங்கணும் வெற்றி முரசு கொட்டிய கிரேக்கப் பெருவேந்தனின் வரலாற்றை முழுமையாக விளக்கும் அரிய நாடகம்! உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சிகளும் உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழச்செய்யும் பகுதிகளும் சிந்தனைக்கு அரிய விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த ஏடு இணையற்ற ஏடு! தமிழில் இதுபோல் இதுவரை வெளிவந்ததில்லை!!

4. கிள்ளிவளவன் 1 50

கிள்ளிவளவன், நிலாச்சோறு, குமணன், இரத்த பாசம், புத்தர் ஆகிய ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. ஏற்றமிகு கருத்துக்களைக்கொண்ட எழிலார் ஏடு!

கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்.

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

Venkatesan Press, Madras-1.